SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

75-ம் புத்தகம் 5-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு மாசிமாசம் 2-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## கிறீஸ்துவே மானிடர் கதி

### மறைப்பண்டிதர்: ஆர். அருளப்ப சுவாமிகள்

(முன்தொடர்ச்சி)

3. "நானேவாசல், என்வழியாய் ஒருவன் உட்சென்றால் ஈடேற்றம் அடைவான்." (அரு. 10. 9)

கடவுளிடம்செல்லத் தன்னையே வாசலாக அமைத்துக்கொள்ளவும், தன்வழியாயன்றி எவனும் கடவுளிடம் செல்லமுடியாதென்றும் அவ்வளவுதிட்டமாகவும், உறுதியாகவும் எந்தமனிதன் கூறமுடியும்?

4. "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடம்வந்து அருந்தக்கடவான்" (அரு. 7. 37)

மனிதனுக்கு இடைவிடாமல் இருக்கும் இவ் ஆன்மவேட்கையைத் தீர்ப்பதற்குத் தன்னிடம் சீவியநீர் இருக்கிறதென்று யார் தைரியமாகச் சொல்லமுடியும்?

5. "வானமும்பூமியும் அழிந்தாலும், என்வார்த்தை அழியாது" (லூக்கா 22 .33)

குறைவுள்ள, உறுதியற்ற, வலியற்ற எளியமனிதன் கூறக்கூடிய மொழியா இது?

6. "நானும் பிதாவும் (கடவுளும்) ஒன்றே". (அரு. 10.31)

"ஆபிரகாம்உண்டாகிறதற்கு முன்பே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவேமெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்" என்றார். தாம்உலகில் பிறப்பதற்கு எத்தனையோநூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த ஆபிரகாம் பிதாப் பிதாவுக்கு முன்பே தாம்எப்படிஇருக்கமுடியும், கடவுள்சுவாபத்தில் இல்லாமலிருந்தால்!

7. "என்னைவிடத் தகப்பனையாவது தாயையாவது அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு அருகனல்லன்." (மத். 10.37)

தாயையும் தந்தையையும்விட அதிகமாகத் தன்னை நேசிக்க வேண்டுமென்று பித்தன்கூட உளறமாட்டான். கடவுள்ஒருவரே அத்தகைய கட்டளையிட முடியும்.

கிறீஸ்து இத்தகையமொழிகளைச் சொன்னதுமட்டும் பெரிதன்று. இந்த 20 நூற்றாண்டுகளாய்த் தாயையும் தந்தையையும்விட, தம்உயிரையும்விட, அவரை அதிகமாக நேசித்தவர்களின் கணக்கை யார் அறிவார்? யாரோ ஒருபைத்தியக்காரன் கூறிய மொழிகளை மனுக்குலம் இவ்வளவு ஆர்வத்தோடு ஏற்று நிறைவேற்றிற்று, இன்றும் நிறைவேற்றி வருகிறதென்றால் அதைவிடப் புதுமையே வேண்டியதில்லை. கிறீஸ்துவின் உண்மைத் தெய்வத்தன்மையை எண்பிக்க!

இந்த இருபது நூற்றாண்டுகளாகக் கிறீஸ்துவைப் பின்பற்றியவர்கள் அத்தனைபேரும் கிறீஸ்துவின் வெளிச்சத்தில் நடந்தவர்கள். அத்தனைபேரும் கிறீஸ்துவில் தங்கள் ஆன்மசாந்தியை அடைந்தவர்கள். அத்தனைபேரும் கிறீஸ்துவினிடம் தங்கள் ஆன்ம வேட்கையைத் தீர்த்துக்கொண்டவர்கள். அத்தனைபேரும் ஒருபித்தனுடைய வார்த்தையைக் கேட்டு மயங்கிவிட்டார்களா? அங்ஙனமிருந்தால் இந்த 20 நூற்றாண்டுகளாக உலகமே ஒருபெரிய பைத்தியக்கார ஆஸ்பத்திரியாய் இருக்கிறதென்று சொல்லிவிடுங்கள்!

இல்லை, கிறீஸ்துபெருமான் பித்தனுக்குரியமொழிகளைப் பேசியவர் அல்லர். தெய்வத்துக்குரியவற்றையே பேசியவர். தெய்வப்பிறவியே அவர்.

8. பிலாத்தின் முன்னிலையில் பெருங்குற்றவாளியாக நிறுத்தப்பட்ட அந்தநேரத்தில், "நீ தேவகுமாரனே!" என்று பெரியகுரு ஆணையிட்டுக் கேட்டபோது: "ஆம், நீர் சொன்னபடியே. அன்றியும் மனுஷகுமாரன் (நான்) சர்வவல்லவருடைய வலப்பக்கத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல்காண்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

எத்துணை தெய்வீகஉறுதியிருந்தால் இத்தகையமொழிகளை அந்நேரத்தில் கூறியிருக்கமுடியும்!

9. வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள்புறப்பட்டுப்போய்ச் சகலசாதிமக்களையும் சீஷராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த இஸ்பிரீத்துவின்பேரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். நான்உங்களுக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி பிரசங்கஞ்செய்யுங்கள். (மத். 28, 18-20)

"உலகமெங்கும்போய்ச் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் போதியுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் ஈடேற்றம் அடைவான். விசுவசியாதவனோ ஆக்கினைக்கு ஆளாவான்" (மாற்கு 16. 16) என்று இறுதியில் சீடர்களை உலகெங்கும் அனுப்பும்போது சொன்ன இம்மொழிகளை வேறு எந்த மதாசிரியரும் சொன்னதாகத் தெரியவில்லை. சொல்வதற்கு, அதாவது உலகெங்கும் தங்கள்கொள்கைகளைப் பரப்ப அவர்களுக்கு நெஞ்சுத்திடன் இருக்கவில்லை. அப்படிச்சொல்லியிருந்தாலும் அதுநிறைவேறவேயில்லை. கிறீஸ்துதந்த இந்தக் கண்டிப்பான கட்டளையானது இந்த இருபதுநூற்றாண்டுகளாய் நிறைவேறிவருகிறது. உலகில் எத்திசையிலும் அவரதுபோதனைகள் பரவிவருகின்றன. கிறீஸ்தவர்கள்தொகை அதிகரித்துவருகின்றது. கத்தோலிக்க திருச்சபையின் மாண்பு பெருகிவருகிறது. இடைவிடாதஎதிர்ப்பு இருந்தாலும், எத்தனையோதுன்பங்கள் நேர்ந்தாலும் அனைத்தையும்வென்று புதுமலர்ச்சியுடன் திகழ்கிறது. கிறீஸ்துவின்போதனைஒன்றே உலகை வெல்கிறது. அவர்கூறியதுபோலக் கடுகுசெடியின் கிளைகளைப்போல் உலகெங்கும் தன்ஒளியை வீசுகிறது. இதற்குஇணையாக வேறெந்த மதாசிரியருடைய கொள்கைகளும் இல்லையென்று உறுதியுடன் அறைகூவலாம்.

இஃதொன்றே கிறீஸ்துபெருமானின் உண்மைத்தன்மையையும், தெய்வத்தன்மையையும் எண்பிக்கப்போதுமானது என்றால் மிகையாகுமோ?

ஆகையால்இங்ஙனம் வேண்டுங்கள்:

"இன்மையினின்றுஉண்மைக்கு
இறைவா என்னை ஈர்த்துச்
செல்
அறியாமையினின்று அறிவுக்கு
ஆண்டவ என்னை அழைத்துச்
செல்
இருளதனினின்றுஒளிபெறவே
ஒளியோனே எனக் கொளி
தருக
குறைவகன்று நிறைவெய்தக்
குருதி தந்தோய் அருள்தருக.

### தபசுகாலத்தின் முன்வரும் 3-ம் ஞாயிறு

#### சுவிசேஷ வாசிப்பு

(மத். 20: 1—16)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கிச் சொன்ன உவமையாவது: பரலோகஇராச்சியம் தனது கொடிமுந்திரித் தோட்டத்துக்குக் கூலியாட்களை அமர்த்துவதற்காக அதிகாலையிற் புறப்பட்டுப் போன குடும்பத்து எசமானுக்கு ஒப்பாயிருக்கின்றது. அவன் கூலியாட்களோடு நாளொன்றுக்கு ஒருதெனியர் என்னும் நாணயங்கொடுக்க ஒப்பந்தஞ்செய்து, தனது கொடிமுந்திரித் தோட்டத்துக்கு அவர்களை அனுப்பினான். ஏறக்குறைய மூன்றுமணிநேரத்திலும் அவன் வெளியேபோய், பொது இடத்தில் வேலையற்று நின்றுகொண்டிருந்த வேறுசிலரைக்கண்டு: நீங்களும் என் கொடிமுந்திரித் தோட்டத்துக்குப் போங்கள்; நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேனென்று அவர்களுக்குச்சொன்னான். ஆதலால் அவர்கள் அவ்விடம்போனார்கள். அவன் ஆறும், ஒன்பதாமணி வேளைகளிலும் மறுபடியும் புறப்பட்டுப்போய் அவ்விதமே செய்தான். ஏறக்குறைய பதினோராம்மணி நேரத்திலும் இன்னமும் வெளியேபோய், நின்றுகொண்டிருந்த மற்றச்சிலரையுங்கண்டு: நீங்கள் வேலைசெய்யாமல் சோம்பலாய் நாள்முழுதும் இங்கேநிற்பானேனென்று அவர்களைக்கேட்டான். அவர்களோ: எங்களையாரும்வேலைக்கு அமர்த்திக்கொள்ளாததினால் தான் என்று அவனுக்குச் சொல்ல, அவன்: நீங்களும் என் கொடிமுந்திரித் தோட்டத்துக்குப் போங்கள் என்று அவர்களுக்குக் கூறினான். பொழுதுபோனதும், கொடிமுந்திரித் தோட்டத்தின் எசமான் தன் காரியக்காரனைநோக்கி: வேலையாட்களை வரவழைத்துக் கடைசியில்வந்தவர்கள்துவக்கி முதல் வந்தவர்கள்வரைக்கும் அவர்களுக்குக் கூலிகொடு என்றான். ஆதலால், ஏறக்குறையப் பதினோராம் மணிக்கு வந்தவர்கள் முறைவந்தபோது அவர்களும் ஒவ்வொரு தெனியர் பெற்றார்கள். அப்போது முந்திவந்தவர்களும் அணுகித் தாங்கள் அதிக

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க சமாச்சாரம்

### பேதுருவானவரின் அஸ்திகள்

ரோமாபுரியிலே சம்பேதுருவானவர் மகா ஆலயத்தின்கீழ் நிலத்தை அகழ்ந்து பத்துவருடகாலமாக நடத்திய ஆராய்ச்சியின் அந்தரங்கம்—அதாவது சம்பேதுருவானவரின் திரு எண்புகள் கண்டெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும்சம்பவம்— இப்பரிசுத்தவருடத்திலே பாஸ்குத்திருநாளுக்குச் சற்றே முன்னதாகப் பிரசித்தஞ்செய்யப்படுமெனப் பரிசுத்தவருடக் கொம்மிற்றியின் காரியதரிசியான மொஞ். பிஞ்ஞேதோலிஅவர்கள் சமீபத்திலே அறிவித்திருக்கின்றார். அர்ச். பேதுருவானவரின் திருஅஸ்திகள் கண்டெடுக்கப்பட்டதாக வெளிவந்த அறிக்கைகளை உறுதிப்படுத்தத் தம்மால் இயலாதென்றும், ஏனெனில் அங்கு நடைபெற்ற ஆராய்ச்சிக்குப் பொறுப்பாளிகளாய் இருந்தவர்களுக்கு மாத்திரமே அதுபற்றியவிபரம் தெரியுமென்றும், அந்த இரகசியத்தைக் காத்துவைப்பதாக அவர்கள் விசுவாசப்பிரமாணஞ் செய்திருக்கிறார்களென்றும் அவர்தெரிவித்திருக்கின்றார்.

### உடுப்பின்றித் திவ்வியபூசை

திருவஸ்திரங்கள் அணியாமல் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுப்பதற்கும், முக்கியமில்லாத பகுதிகளை விட்டுப் பூசைத்திருச்சடங்குகளைக்குறைத்துக் கொள்வதற்குமான அனுமதி சீனதேசத்திலும் கத்தோலிக்க மேற்றிராணிமார், குருமாருக்கும் அருளப்பட்டிருப்பதாகப் பெய்ப்பிங் நகரிலிருந்து ஓர் குருவானவர் அறிவித்திருக்கின்றார். பெய்ப்பிங் நகரிலே நிலைமைகள் ஏறக்குறைய முன்போல இருந்துவருகின்றன. கோவில்களிலே விசுவாசிகள் தேவாராதனைகளுக்கு இன்னமும் நன்கு சமுகமளித்துவருகின்றார்கள். மனந்திரும்புதல்களும் படிப்படியாகப் பெருக்கமடைந்து கொண்டே வருகின்றன. ஆனால் நாடு பகுதிகளிலோ நிலைமைகள் மிகமோசமாயிருக்கின்றன. சுதேசிகளும், பிறநாட்டினருமான குருமார் தங்களால் செய்யக்கூடியதெல்லாம் செய்துவருகின்றனர். பகல்வேளையிலே அநேகர் கமக்காரராகவும், வியாபாரிகளாகவும், கூலிக்காரராகத்தானும் வேலைசெய்கின்றனர். இரவிலே அமைதியான ஓர் இடத்தில் ஏதோ ஒருவகையிலே திவ்வியபூசை நிறைவேற்றிவருகின்றனர். மரியாயின்சேனை கிரமமாகத் தனது சேவையைத்தொடர்ந்து செய்து, விசுவாசிகளின் வேதப்போக்கைப் பலப்படுத்தித் தினமும் அவர்கள் வேதகடமைகளை அனுசரிப்பதை விருத்தியடையச்செய்துவருகின்றது.

### போராசிரியரும் தலைவரும்

யப்பானியதேச ரோக்கியோ தலைநகரிலே கத்தோலிக்க சோபியா சர்வகலாசாலையின் தலைவராக 1946-ம் ஆண்டுமுதல் இருந்துவருகிறவரான டக்றர் நவோஜிறோ முறகாமி அவர்கள் மனந்திரும்பிச் சென்றமாசம் அச்சர்வகலாசாலைச் சிற்றாலயத்திலே ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றார். இவர் யப்பானிய சரித்திரசம்பந்தமாய் நடத்திய ஆராய்ச்சிகளாலே அத்தேசமெங்கும் மிக்க பிரஸ்தாபம் பெற்றவர். சரித்திரபூர்வமான சாதனங்களைப் பெருந்தொகையாகச் சேகரித்து அச்சேற்றிவருகின்ற 'நிப்பன் ஷொர்வோ' என்ற பத்திரிகையின் பிரதம ஆசிரியர்களில் ஒருவர். இவரைத்தவிர மெய்ஜி சர்வகலாசாலையிலே கீழ்த்தேசங்களின் சரித்திர போராசிரியரும், சோபியாசர்வகலாசாலையிலே ஓர்போதகாசிரியருமான டக்றர் கொர்யோ அயோமா அவர்களும் மனந்திரும்பி இவருடன்தானே கத்தோலிக்க திருமறையில் சேர்ந்திருக்கின்றார்.

### பிரபல நூற்றண்டுவிழா

பிரித்தானியதேச கத்தோலிக்க மக்களுக்கு இந்தப் பரிசுத்தவருடம் இரட்டையான விழாக்களைக் கொண்டு விளங்குகின்றது. அதனால் அவர்கள் பரிசுத்தவருடப் பத்திவிழாக்களிலே கத்தோலிக்க உலகமுழுவதோடும் கலந்துகொள்வதுடன் தங்களுக்கே சிறப்பான மற்றோர்விழாவிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதாவது இங்கிலாந்திலும், வேல்சிலும் கத்தோலிக்க அதிமேற்றிராசனமும், மேற்றிராசனங்களும் திரும்பவும் ஸ்தாபிக்கப்பெற்ற நூற்றாண்டுவிழா இதுவாகும். 1850-ம் ஆண்டு புரட்டாசிமாசம் விடுத்த அப்போஸ்தொலிக்க திருமுகங்களாலே ஒன்பதாம் பத்திநாதபாப்பானவர் இங்கிலாந்திலும், வேல்சிலும் வேறும் பன்னிரு மேற்றிராணிமாருடன் கருதினால் வைஸ்மன் ஆண்டவரது அத்தியட்சதலைமையின்கீழ் வெஸ்மினிஸ்றரை ஓர் அதிமேற்றிராசனமாக விதித்து வகுத்துவிட்டலாயினர். அதனால் பிரித்தானிய இராச்சியத்திலுள்ள கத்தோலிக்கமக்களுக்கு இப்பரிசுத்தவருடம் விசேஷ குதூகலத்துக்கும் கொண்டாட்டத்துக்கும் உரியதொன்றாகும். அதனால் அங்கே வருகிற புரட்டாசிமாதம் இந்த விழாக்கொண்டாட்டத்தைத்தொடர்ந்து ஆங்கிலேய கத்தோலிக்க அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களாகிய சகலரும் ரோமாபுரிக்கு யாத்திரைபோகவிருப்பது விசேஷப்பட்டதொன்றாய் இருக்கும்.

### பாப்பரசரும் திருக்கல்லறையும்

சம்பேதுருவானவர் மகா ஆலயத்தின்கீழ் அவரதுகல்லறை கண்டறியப்பட்டிருக்கிறதெனப் பரிசுத்த தந்தை அவர்கள் சமீபத்திலே பிரசித்தமாக அறிக்கையிடுவாரென வத்திக்கான் வட்டாரங்கள் சென்ற வெள்ளிக்கிழமை இரவு தெரிவித்திருப்பதாக அங்கிருந்து தந்திச்சமாச்சாரம் எட்டியிருக்கிறது. அங்ஙனம் இதைப்பிரசித்தமாக அறிவிப்பதற்குத் தாம் பாப்பரசராகத் தெரியப்பெற்ற பதினொராம்வருட நிறைவு தினமாகிய பங்குனிமாதம் 2-ந் திகதியை அவர்தெரிந்திருக்கிறாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளையிற்றானே சம்பேதுரு அப்போஸ்தலரின் கல்லறையைச் சூழவர அம்மகா ஆலயத்தின்கீழ் அகழப்பெற்றுக் கண்டறியப்பட்ட திருக்கெபிகளையும் அவர் காட்சிக்கு ஆரம்பித்துவைப்பார். பாப்பாசர் சம்பேதுருவானவரின் கல்லறையைப்பற்றிப் பிரசித்தமாக அறிவிக்க விருப்பதானது, அர்ச். பேதுருவானவர் வேதசாட்சியாக மரணமடைந்த இடமாகிய நீரோவின் சேர்க்கஸ்மைதானத்தின்பக்கமாக அடக்கஞ்செய்யப்பெற்றாரென்ற புராதான கத்தோலிக்க பாரம்பரியத்தையும், 300 வருடங்களுக்குப்பின் கொன்ஸ்தந்தீன் சக்கிரவர்த்தியாலே அந்த மகாஆலயம் கட்டியெழுப்பப்பட்டதையும் உறுதிப்படுத்துவதாகுமென்றும் செய்தி கிடைத்திருக்கிறது.

---

❁ மகா மனந்திரும்புதலுக்கான இந்தப் பரிசுத்தவருடத்தைப் பாப்பரசர் ஆரம்பித்துச் சில மணித்தியாலங்களின்பின் லூத்தேரின் புரொட்டெஸ்தாந்த சபையைச்சேர்ந்த மார்த்தா சுபிளர் எனும் பெண்மணி சம்பேதுருவானவர் மகா ஆலயத்தில் ஞானஸ்நானம்பெற்றுப் பரிசுத்தவருடத்திலே முதலாவதாக மனந்திரும்பிய மாதுவாயினாள். இவள் "மிஸ் அலிஸ்" என்று பிரபலமாக அறியப்பெற்றவள்.

❁ மலேரியாக் காய்ச்சலைக் குணமாக்குவதற்கு மற்றெந்த மருந்தைக் காட்டிலும் மிகவும் அதிகஞ் சிறந்ததும், மிகவும் அதிகஞ்சக்தி வாய்ந்ததுமான புதியமருந்து ஒன்றைப் பிரித்தானிய ரசாயன சாஸ்திரிகள் ஆராய்ச்சியில் கண்டறிந்திருக்கிறார்கள். இதன் நாமம் 'குளோரேக்குயின்' என்பது. ரைபோயிட் சுரத்துக்கும் முதல் உண்மையான மருந்தாகக் 'குளோமிசெற்றின்' எனும் மருந்தும் கண்டு பிடித்துச் செய்யப்பட்டிருக்கிறது.

## "பூம் பொழில்"

ஆக்கியோன்: வண. ஜே. எம். நிக்கொலாஸ் சுவாமி அவர்கள், மேற்றிராணியார் இல்லம், தூத்துக்குடி. நாகர்கோவில், அசிஸி அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. 60 பக்கங்கள் கொண்டது. பிரதி விலை அணா 4. கிடைக்கும் இடம்: அர்ச். சவேரியார் அச்சகம், தூத்துக்குடி.

பூம்பொழில்! என்ன அலங்காரமான நாமம். பூஞ்சோலை என்றால் அதனை எவர்தான் விரும்பாதிருப்பர்? அப்பூங்காவிலே மலர்ந்திருக்கும் கண்ணுக்கழகான பலவின மலர்களையும், அவற்றினின்றெழுந்து இளந்தென்றலிற் கலந்து எங்கும்பரிமளிக்கும் இனிய வாசனையையும், கருத்தைக்கவரும் இன்பகாட்சியையும் கண்குளிரக் காணவும், உளங்குளிரச் சுவாசிக்கவும் எவர்தான் ஆசியாதிருப்பர்? இன்று கத்தோலிக்க தமிழுலகில் அச்சுப்பிரசுர அப்போஸ்தலர்களில் ஒருவராகத் திகழும் வண. ஜே. எம். நிக்கொலாஸ் சுவாமியவர்கள் எமது கண்ணையும், கருத்தையும் ஒருங்கே ஈர்த்து ஞானமனோகர காட்சியளிப்பதும், பேரின்ப நறுமணம் பரிமளிப்பதுமாகிய "பூம்பொழில்" என்னும் மற்றுமோர் புனித நூலைக் கத்தோலிக்க தமிழுலகிற்குத் தந்திருக்கின்றார். இப்பூங்காவிலே பலவினமான 58 பூஞ்செடிகள் வளம்பெற அமைந்து பலவர்ணமலர்களையும் புஷ்பித்துப் பொலிந்து விளங்குகின்றன. "கல்லறைத் தோட்டத்தில்" நிகழ்ந்ததென்ன! அன்றலர்ந்த மலர்கள் அவன் உள்ளத்தில் எழுப்பிய சிந்தனையென்ன? அழகிய சலவைக்கல்முன்பாக அந்த வெண்பூச்செண்டை வைத்தவர்யார்? அங்கு முழந்தாளிட்டிருந்த உருவம் யாது? உயிரோடிருப்பவர்களாகிய நாம் சண்டை போடுகின்றோம்! இறந்தவர்களுடன் ஏன் மனஸ்தாபங் கொள்ளவேண்டும்? இதில் அடங்கியுள்ள இரகசியம் என்ன? அண்ணன், தங்கை இருவரும் திரும்பவும் சமாதானமான சம்பவம் கண்ணையே கலங்க வைக்குமன்றோ! இவ்வாறாக "இப்பூம்பொழில்" அநேக சிறந்தபுஷ்பங்களையும், பூச்செண்டுகளையும் கொண்டு மிளிர்கின்றது. அதனால் கத்தோலிக்க மக்கள் ஒவ்வொருவரும் இப்பூம்பொழிலைப்பெற்றுப் படித்துத் தங்கள் இல்லங்களில் ஞானபரிமளங் கமழச்செய்ய வேண்டுமென்பதே நமது பேரவலாகும். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

---

### நீர்கொழும்பு—கடற்கரைத்தெரு
## திருநாள்மகோற்சவம்

நீர்கொழும்பு—கடற்கரைத்தெருவிலே கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச். செஸ்தியாம் முனீந்திரனின் திருநாள்மகோற்சவம் இம்மாதம் 12-ந் திகதி ஓர் மகா ஞான ஒடுக்கத்துடன் ஆரம்பமாயது. ஞான ஒடுக்கத்தின்போது வண. சற். என். குரூஸ் சுவாமியவர்களால் பாவிகளின் ஈடேற்றம் எனும் பொருள்படக் கேட்டோர் அகமுருகும்வண்ணம் அநேக பிரசங்கங்கள் ஒலிபரப்பிகள் மூலம் செய்யப்பட்டன.

15-ந் திகதி எங்கள் பாதுகாவலரின் திருச்சுரூபமானது கோவில் முகப்பு மேடையிலே மகா மேன்மைதங்கிய தோமஸ் குறே அதிமேற்றிராணியாண்டவரால் பாண்டுவாத்தியங்கள் முழங்க, "நேச பாதுகாவலான தூய செபஸ்தியாமுனியே" என்ற பண்ணிசைக்க ஆடம்பரமாக ஸ்தாபிக்கப்படலாயிற்று. அத்தோடு கொடித்தம்பமும் நிறுவப்பட்டது. 20-ந் திகதி மகா ஞானஒடுக்க வெள்ளிவார நவநாளின்போது சற்பிரசாத எழுந்தேற்றத்துடன் வண. எல். ஜே. அகஸ்ரீன் சுவாமியவர்களால் உலகம், சரீரம், பிசாசு எனும் சத்துருக்களைச் செயிக்கும் முறைபற்றிய பிரசங்கத்துடன் பிழைதீர்க்கிற மந்திரம் பாடப்பெற்று எல்லோரும் தேவதாயாருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள்.

21-ந் திகதி சனிக்கிழமை மத்தியானம் முன்னர்நடந்திராதவிதமாய் முதன்முறையாக ஓர் அன்னதானம் நீர்கொழும்பு நகரசங்க அங்கத்தவர் திரு. டபிள்யூ. மனுவல் வொளஞ்ஞ அவர்களால் நாலாயிரவருக்கதிகமான பிறவூர் மக்கட்கு அளிக்கப்பட்டது. மாலை 5 மணிதொடக்கம் பிறவூர் வாசிகள் அர்ச். செபஸ்தியாரின் பாதுகாவலை நாடிச் சரிந்தவண்ணமாயிருந்தார்கள். ஆலயத்தின் உள்ளும்புறமும் மின்சார தீபங்களாலும், பன்னிறத் துவசங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த காட்சி மிக மாட்சியாயிருந்தது. அழகிய வெண்ணிறப் புஷ்பங்களால் பீடம் சீருடன் துலங்கிற்று. இரவு 8-30 மணியளவில் வண. இ. முத்துப்பிள்ளை, வண. கரெக் எனும் குரவர்கள் உதவிபுரிய, வண. கொலரெக் சுவாமியவர்களால் பலகுருமார் சமுகமாக மாலையாராதனை ஆரம்பமானது. அதன் முடிவில் வண. சற். என். குரூஸ்சுவாமி அவர்களால் "தேவதாயின் அடைக்கலத்தை அண்டினோர் கைவிடப்படார்" எனும் பொருள்கொண்ட ஓர் அரிய பிரசங்கம் மக்கள்மனத்தை அருட்டும் வண்ணம் ஆற்றப்பெற்றபின் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அளிக்கப்படலாயிற்று.

திருநாளன்றுகாலை 4 மணிதொடக்கம் 8 மணிவரை திவ்வியபூசைகள் நிறைவேறின. திருநாட் பாடற்பூசை வண. எம். அன்ரனி பெர்னாண்டோ, வண. ஜே. யோசெவ் பெர்னாண்டோ குரவர்களின் துணையுடன் வண. எல். ஜே. அகஸ்ரீன் சுவாமியவர்களால் நிறைவேறியது. அவ்வேளை வண சற். என். குரூஸ் சுவாமியவர்கள் "சத்தியவேதத்தை மறுதலிப்பதிலும் இறப்பதுமேல்" என்பதை நிரூபித்த அர்ச். செபஸ்தியாரின் வீரதீர சீவிய சரிதையை மக்கட்குஎடுத்துக்கூறி இனியதோர் பிரசங்கஞ்செய்தார்.

பின்னேரம் 4 மணியளவில் புஷ்பங்களாலும், மின்சார தீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த ரதத்தில் அர்ச். செபஸ்தியார் முனியோரின் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டுச் சனசமுத்திரம் பயபக்தியுடன் முன்செல்ல பவனிகொண்டெழுந்தது. அதுசென்ற பாதையின் இருமருங்குகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவ்வேளை பாண்டுவாத்தியம்முழங்க அர்ச். செபஸ்தியாரைத் துதித்துப் பலபாக்கள் படிக்கப்பட்டன. இரவு சுமார் 9 மணியளவில் பவனி கோயிலை அடைந்ததும் கட்டளைக்குரவர் வண. எம். அன்ரனி பெர்னாண்டோ சுவாமியவர்கள் திருச்சுரூபஆசீர்வாதம் அளித்துநிற்கத் திருநாள் சுபமே முடிவெய்திற்று.

W. P. J. பெர்னாண்டோ,
(ஆசிரியர்.)

---

### நித்திரையில் குற்றுண்டவர்கள்

நயினாதீவு உதவிப்போஸ்ற்மாஸ்றரான திரு. எஸ். நடராஜ ஐயரும், அவர்மனைவியாரும்சென்றபுதன்கிழமை தங்கள்வீட்டிலே நித்திரையாயிருந்தபோது, திருடன்ஒருவன் வீட்டுக் கூரைவழியாய்இறங்கி உள்ளேசென்று இருவரையும் கத்தியால் குற்றிவிட்டான். போஸ்ற்மாஸ்றரின்பிள்ளைகள் அறைவிளக்கைக் கொளுத்தியதும் ஆசாமி ஓடித்தப்பிவிட்டான். காயமடைந்தபோஸ்ற்மாஸ்றரும் மனைவியாரும் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார்கள். பொலிசார்சென்று வீட்டைப் பரிசோதனை செய்து திருடன் குற்ற உபயோகித்ததாகச்சொல்லப்படும் ஓர்வில்லுக்கத்தியைக் கண்டெடுத்தனர். ஆர். சண்முகநாதனெனும் நயினாதீவுக் கமக்காரனொருவன் சந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்டிருக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவபாலனைக் கோவிலில் காணிக்கையாக நேர்ந்தகாதை

(சுவாமி வீரமாமுனிவர் இயற்றிய "தேம்பாவணியை" ஆதாரமாகக் கொண்டு சுருக்கிஎழுதப்பட்டது)

( முன்தொடர்ச்சி )

இவ்வாறு ஜெருசலேமாநகர மாளிகைகளின் சிகரங்கள்மேல் கட்டப்பட்டிருக்கும் கொடிகள் ஏரோதரசனின் கொடுமைக்கஞ்சி அம்மூவரையும் இங்கேவராதீர்கள், வாராதீர்கள்என்று தடைசெய்யும் தன்மைபோல் தோன்ற

மண்புடை வான மன்னனை வணங்கி
  வளம்பெறு பசியபொற் கோவில்
விண்புடை தீண்டி மின்மணிக் கோட்டின்
  மீ(து) ஒளிர் பதாகைநின்(று) ஆடல்
ஒண்புடைக் கொடிகாள் நில்லுமின் நின்மின்
  உயிர்அடும் துயர்அற வந்த
எண்புடை காக்கும் அருட்புரி நாதன்
  இவனென அமர்த்திடல் போன்றே

மண்புடை......வானரசனாகிய கடவுளைப் பூவுலகில் வணங்கித்தொழுது மாட்சிமைபெறுகின்ற பசும்பொற்கோவிலிலே வானமண்டலத்தை அளாவி விளங்குகின்ற மணியாற்செய்த சிகரத்தின்மேல் இலங்கும் பெரியகொடியானது அந்தவேளை ஆடுந்தன்மையானது— (முன்சொன்ன கொடிகளைப் பார்த்து) அழகியகொடிகளே நில்லுங்கள்! நில்லுங்கள்! உயிரைக்கொல்லும் துன்பங்களை மாற்றும்படியாகவந்த எட்டுத்திசைகளையும்காக்கின்ற தயைசெய்யும்நாதன் இவன்தானே ; வாவிடுங்கள் ; தடைசெய்யாதீர்களென்று அவற்றைத் தான்கையமர்த்தின தன்மைபோன்றிருந்தது — அவ்வாறிருக்கும்போது வேதவடிவாய்வந்த அம்மூவரும் நகரின் கோட்டைவாயிலைக் டந்து—

அகில்அடும் புகையும் வாசபூம் புகையும்
  அடர்ந்துநல் இருள்செயும் தெருவின்
முகில்அடும் குன்றில் துணைமயில் திரிந்த
  முகம்என இருவரே நடந்து
துகில்ஒடும் ஏந்தும் குழவிஅம் முகிலுள்
  தோன்றிய மதிஎனத் தோன்றி
இகல்அடும் இன்பத்(து) எவரும்உட் குளிர
  இளங்கதிர் பரப்பியே போனர்

அகில்......அகில்தரும்புகையும், வாசப்பூம்புகையும் அடர்ந்து, அதனால் மிகுந்த இருளைச்செய்யும் அந்தஇராசவீதியிலே சூசைமாதவனும், கன்னித்தாயும் ஆகியஇருவரும், மேகங்கள் சூழ்ந்துபொருந்திய ஒருகுன்றிலே இருமயில்கள் திரிந்தவாறுகடந்து—நல்லஆடையினுள் தாங்கள்ஏந்திய தேவகுழந்தையானது அம்மேகத்துள்தோன்றிய சந்திரனைப்போலத் தோன்றிவரநிகரற்றஇன்பத்துடன் எவருமேஉள்ளத்தில் குளிரும்படியாக இளங்கிரை வீசிப்போனார்கள். —அங்ஙனம் இவர்கள் தங்கத்தால் இழைத்து மணிகள் பதித்த பொற்பாத்திரத்தில் நல்லஅமிர்தத்தை ஏந்ினாற்போல வேதத்தைக் கற்பிக்கும்நாதனைத் திருக்குழந்தையாய்ஏந்திச் சூரியஅஸ்தமனவேளையில் ஒரு சிறுமனையிற்போய்த் தங்கினார்கள். இப்பூவுலகில் கைம்மாறுகருதாதவர், கொடுக்கின்றகொடையானது ஒன்று ஆயிரமாக—

சேண்நிசர் பயனை விளைக்கும்என்(று) உள்ளிச்
  செல்வர் மூன்(று) அளித்தவான் நிதியம்
பூண்நிகர் மறைநூல் அணிவளன் இருளின்
  போர்வைபோர்த்(து) ஆலயத்(து) அளித்தான்

சேண்......(ஒன்று ஆயிரமாக) ஒத்தபயனை வானுலகில் விளைக்குமெனநினைந்து முன்னர் மூவரசர்கள் தேவகுமாரனுக்கு இறையாகக்கொடுத்த திரளானபொன்னையெல்லாம் வேதத்தை ஆபரணமாகஅணிந்த சூசைமாதவன் அங்குபோய்ச்சேர்ந்த இரவில்தானே இருளின்போர்வையைப் போர்த்து எவருங்காணாமல் ஒளிப்புமறைப்பாகக் கோவிலுக்குக் கொண்டுபோய்க் கொடுத்தான். அதாவது புகழைவிரும்பாமலே ஒருவரும்அறியாமல் இரவில் ஒளித்துக்கொண்டுபோய்க் கொடுத்தான்.

விண்திறந்(து) உறைந்த பூசனைஅன்றே
  விழிப்பதற்(கு) அருத்தியோ(டு) உயர்வான்
கண்திறந்(து) என்னக் கதிரவன் முந்நீர்
  கடிந்(து) எழும் காலையில் இனிதாய்ப்
பண்திறந் துவைப்ப ஆர்க்குநற் சுடர்செய்
  பசியபொற் கோயிலை விருப்பம்
கொண்(ள்) திறந்(து) இருவர் கோதறு பலியாய்க்
  குழவியை ஏந்திஎய் தினரே

விண்திற......மாதவனும், மரியதாயும் தேவதிருக்குமாரனைக் கோயிலிலே நேர்ந்துகொடுக்க இருப்பதால் அன்று அக்கோயிலில் வழங்கத்தகும் தேவபூசையைச் சூரியன் தான்காண்பதற்கு ஆசைப்பட்டு உயர்ந்தவானம் கண்ணைத்திறந்தாற்போன்ற தோற்றத்தோடு இரவு தான்தங்கியிருந்த கடலைவிட்டு ஆகாயத்தைத் திறந்துகொண்டு எழுந்தபோது (அதாவது உதயவேளை) அவ்விருவரும் மாசற்றபலியாகத் திவ்வியகுழந்தையை ஆசையோடு ஏந்திக்கொண்டு அக்காலைவேளைக்குரிய வீணைமுதலிய வாத்தியங்கள் இனிமையாக முழங்கிப் பேரொலிசெய்ய, மிகுந்தஒளியைச்செய்கின்ற சிறந்தபொற்கோயிலை அடைந்தார்கள்

தேக்கிய புகையும் வாமத் தெருட்சியும்
  மருளின் நோக்கிற்(கு)
ஆக்கிய விருந்தின் விம்ம அணிமணிக்
  கோயில் புக்கு
வீக்கிய துவங்கட்(கு) ஒன்றும் மெய்யனை
  வினையின் தீமை
போக்கிய பலிஎன் றுகட் போற்றிவைத்(து)
  இருவர் நின்றார்.

தேக்கிய......கன்னிமரியாயும், சூசைமாதவனும் நிறைந் [illegible] புகைகளும், மணிமுதலியனசெய்த காந்திஒளிகளும் மயங்கி [illegible] னுக்கு இனிதாய்ஆக்கிய விருந்தாகப்பொலிய, அழகிய மணி [illegible] புகுந்து, தேவசுபாவமும், மனுச்சுபாவமுமாகிய இரண்டும் ஒன் [illegible] திருமகனை, நம்முடைய பாவவினையின் தீமையைப்போக்கி நம் [illegible] தும்படி ஏற்றபலியாக பரமநாதன்முன்பாக நேர்ந்துவைத்து [illegible] றார்கள்.

# ஈழமணித் தேவியே! என்றும் வாழி!

— ஞானி —

I

ஈழ மணித்தேவி பாதம்—நாம்
  ஏற்றிப் பணிந்தே யிசைப்பம்நற் கீதம்
சூழு மிருள்கடிந் தோட்டும்—நற்
  சுதந்தர சூரியன் தோன்றின னென்றே

II

கொஞ்சுங் கிளிபூவை பேசும்—மணிக்
  கோகில முள்ளங் குளிர்ந்திடப் பாடும்
கஞ்ச மலர்மணம் வீசும்—வன்னக்
  கான்மயில் தோகை விரித்துநின் றாடும்.

III

வண்டினஞ் செவ்வழி பாடும்—புள்ளி
  மானும் நிழலுடன் வந்துநின் றாடும்
கண்டி ரன்றோநல்ல காட்சி—இனிக்
  கைகட்டி நின்று கலங்கிடல் தாட்சி

IV

அன்னை மடியெமக் கிங்கே—சிங்க
  ஆசன மென்றே யமர்ந்து கொள்வோமே
சொன்ன துயரெலாம் ஓடும்—அந்தச்
  சொர்க்கமும் வந்தெங்கள் பக்கத்தை நாடும்

V

சுத்தத் தியாகிக ளிங்கே—ஒரு
  துள்ளி யிரத்தமுஞ் சிந்துத லின்றி
மெத்தச் சிறப்புடன் தந்த—இந்த
  வீரச் சுதந்தர வாழ்வைத் துதிப்போம்

VI

அச்சம் பறந்திட்ட தென்று—உள
  ஆண்மைநல் வீரம் பிறந்திட்ட தென்று
மெச்சும் புதுவாழ்க்கைச் சோதி—ஒவ்வோர்
  வீட்டிலும் வந்தொளி வீசுதல் கண்டு

VII

கல்வியைக் கண்ணெனக் காப்போம்—உயர்
  காந்தியின் நல்லகை ராட்டினம் நூற்போம்
பல்வித கைத்தொழில் சேர்ப்போம்—அந்தப்
  பங்கயச் செல்வனு மிங்கெய்த பார்ப்போம்

VIII

காணும் பிளவுகள் நீக்கி—இரு
  கண்ணுஞ் சரியென ஒன்றையே நோக்கி
பேணும்நல் லன்புநீர் தேக்கி—எம்மைப்
  பெற்றநன் னடுபொன் னடென வாக்கி

IX

பஞ்சம் பகைபிணி நீங்க—உயர்
  பாக்கிய செல்வம் பலுகிமிக் கோங்க
நெஞ்சினி லானந்த வெள்ளம்—பாய
  நேர்த்தியாய் நன்மனப் பூர்த்தியாய் வாழ்வோம்!

## மாதகல்துறை பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

**இவ்வருஷம் பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள் மாசிமாசம் 2-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 12-ந் திகதி காலை அதிசிறப்பாக முடிவாகும்.**

11-ந் திகதி சாயந்தரம் 7 மணியளவில் **பரிசுத்த லூர்துநாயகியின்** திருச்சுரூபம் சென் தோமஸ் ஆலயத்திலிருந்து ஆடம்பர வைபவங்களுடன் மெழுகுவர்த்தித் தீப அலங்கார சுற்றுப்பிரகாரமாகத் திருக்கெபிசெல்ல, அங்கே மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் வேஸ்பரென்னும் மாலையாராதனை பாடப்பெற்றுச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படும். மறுநாட்காலை மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் பாடற்பூசை நிறைவேற்றப்படும்.

[ யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு

கட்டளைக் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

மாசிமாதம் 1950.

| | | |
|---|---|---|
| வெ | 3 | அர்ச். பிலாசியார், மே. |
| சனி | 4 | அர்ச். கொர்சினு பெலேந்திரர், [மே. |
| ஞா | 5 | தபசுகாலத்தின்முன்வரும் 3-ம் ஞாயிறு (செப்துவாகேசிமா ஞாயிறு) — அர்ச். ஆகத்தம்மாள், க. வே. |
| திங் | 6 | அர்ச். தீத்தசப்பர், மே. |
| செவ் | 7 | அர்ச். ரொமுவால்தர், ம. |
| புத | 8 | அர்ச். மாத்த அருளப்பர், தி. |
| வியா | 9 | அர்ச். அலெக்சாந்திரி சிறிலப்பர், மே. வே. |

சத்தியவேத
பாதுகாவலன்
1950-ம் ஆண்டு
தைமாசம் 2-ந் திகதி

## சுதந்திர தினம்

சரித்திரப் பெருமைவாய்ந்த நமது ஸ்ரீ லங்கா சுதந்திரமடைந்த இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா நாளை நின்றுவரும் 4-ந்திகதி சனிக்கிழமையாகும். இச்சுபநாள் ஓர்சுதந்திரப்பெருநாள். ஸ்ரீலங்காவின் சரித்திரத்திலேயே மகாமுக்கியமான சம்பவம்ஒன்றை ஞாபகமூட்டும் ஓர் தேசீயப்பெருநாள். தேசமக்கள் இதனைப்பெருமிதமாகக் கொண்டாடுவதாலே தேசீயப்பற்று வளர்ச்சிபெற்று, அதுகாரணமாகத் தேசம் நாலாதுறைகளிலும் விருத்திபெற்று ஓங்கும். அதன் கலைகள், கலாசாரங்கள், பாரம்பரியங்கள், பண்பாடுகள் ஆதியன புத்துயிர்பெற்றன போல் தலையெடுத்து நிலைபெறும்.

நமது செல்வச் ஸ்ரீலங்கா சுதந்திரம்பெற்று, ஏன்? அதன் செல்வமக்களாகிய நாம் சுதந்திரம்பெற்று இரு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. நமது நாட்டினை ஆட்சிசெய்வதும், அதன் சுபீட்சத்துக்கானவைகளைச் செய்வதுமாகிய பெரும்பொறுப்பை நாம்கையேற்று இருஆண்டுகள் நிறைவாகின்றன. நாம் சுதந்திரம்பெற்றபின் பாராளுமன்றத்துக்குத் தெரிந்தனுப்பிய நம்பிரதிநிதிகளும், அரசு நடாத்திவருகின்ற மந்திரிமார்களும் கடந்த இருஆண்டுகளிலும் நாம் ஆசித்தவைகளையெல்லாம் ஒருங்கேசாதிப்பதென்றால், இயலாக்கருமம். இது எந்தமந்திர வித்தையாலும் ஆகக்கூடியதன்று. ஆனால், அவர்கள் பொதுவாக எமது நாட்டின் விருத்திக்காக உழைத்துவருகிறார்களெனில் மிகையாகாது. நாட்டின் மக்களும் அவர்களுடன் நன்மனமாகஒத்துழைத்து வருகிறார்களெனில் பிழையாகாது. கிராமமுன்னேற்ற சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், குடியேற்ற கிட்டங்கள்; நெல்வேளாண்மை ...டங்கள், கல்வி ...கருமங்கள் ஆதிய ...பட்டுத் தங்கள்சுய ...ண்டும், அரசாங்கத் ...கொண்டும் பொது ...புரிந்துவருதலும, ...னிப்பதில் மிகுந்தகரி ... மக்களின்தேவை ...ருதலும் பாராட்டத்தக்கன. என்றாலும் பொதுமக்களின் ஐக்கியமுயற்சியும், ஒத்துழைப்பும் வேண்டியமட்டாக அதிகரிக்கவில்லையென்றே சொல்லலாம்.

நாம் சுதந்திரவிழாவைக் கொண்டாடுவதாலேயே தேசம் முன்னேற்றம் அடையமாட்டாது. அதன் தேவை பூர்த்தியாகமாட்டாது. ஆனால், அன்று தினம் ஸ்ரீலங்காவின்மக்கள்ஒவ்வொருவருமே தேசீயஉணர்ச்சிதேங்கியவர்களாய்த் தேசத்தின் நலனுக்காகத் திறம்பாதுழைக்கத் தீர்மானித்துத் தங்களால் செய்யக்கூடியது எதுவோ அதனைச்செய்யத் திட்டமிடவேண்டும். சுதந்திரம் அடைந்தபின் எமது நாடு இதற்குள் எவ்வளவோ முன்னேற்றமும், பிரஸ்தாபமும் அடைந்திருப்பது உண்மையே. ஆனால், தனது மக்களின் உணவு, உடை ஆதியனசம்பந்தமாய் அதுசுதந்திரம் அடைந்ததாயில்லை. அதனால் எமதுநாட்டிலேயே இவைகளை உற்பத்திசெய்து, உண்மைச்சுதந்திரத்துக்கான வழிவகைகளைக்கண்டடைவதும், எல்லாத்துக்கும்முன் கடவுள் திருவருளை இரந்துகொள்வதுமே சுதந்திரவிழாவின் சிறந்தலட்சியங்களாய் இருக்கவேண்டுமென்க.

## சுதேச வர்த்தமானம்

### சத்தியவேத பாதுகாவலன் பஞ்சாங்கம்—1950

பரிசுத்த வருடத்திற்கென விசேஷவிதமாக அச்சிடப்பெற்ற பஞ்சாங்கத்திலே ஒவ்வோர் பிரதி நம்பத்திரிகையுடன் சேர்த்துச் "சத்தியவேத பாதுகாவலன்" பத்திரிகைச் சந்தாதாரர்களுக்கெல்லாம் சந்தோஷமாக அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை அனுப்பிவைக்கின்றது.

### அமேரிக்க கார்விலக்கு

இலங்கை சென்ற1949-ம்ஆண்டின் கடைசியானஆறுமாசங்களிலும் செலவிட்டதிலும் அதிகம்குறைவான டலர்களை இவ்வருடத்தின் முதல் ஆறுமாசங்களிலும் செலவிடவேண்டியதாகும். 1949-ம்ஆண்டு ஆடிமுதல் 1950-ம்ஆண்டு ஆனிவரையில் செலவிடக் குறித்திருந்தது சுமார் 1கோடியே 80 லட்சம் டலராகும். இதில் சென்ற மார்கழி இறுதிவரையில் ஒருகோடி டலர்வரையில் செலவிடப்பட்டுவிட்டது. அதனால்இவ்வருடத்தின் முதல் ஆறுமாசங்களிலும் டலரின்செலவைக் குறைப்பதற்காக அமெரிக்கபுடவைகள், பாவனைக்குத தயாராகச் செய்யப்பட்ட உடுப்புகள், மோட்டர்கார்கள், றேடியோசெற்றுகள், தகரத்தில்அடைத்த மாமிசம், மீன்ஆதியவற்றின் இறக்குமதியை நமதுஅரசினர் முற்றாகத் தடுத்துவிடப்போகின்றனர்.

### மன்னாரும் கடற்தொழிலாளரும்

கடற்தொழிலாளிகளுக்குப் பலவித சுகாத்திய நிலைமைகளிலும் ஓர்பாதுகாப்பாகவும், அவர்கள் தங்கள்தாகத்தைத்தீர்ப்பதற்காகவும் இருக்கும்படியாக மன்னார்ப்பிரிவிலே வடக்கிலும், தெற்கிலுமாக மீன்பிடிதொழில் நடைபெறும் கடற்கரைகள்நீளம தகுதியான தங்குவிடுதிகளும், அவற்றுடன் கிணறுகளும் அருளப்படவேண்டுமெனச் சென்றசனிக்கிழமை நடைபெற்ற கடற்தொழில் ஆலோசனைச் சங்ககூட்டமதொன்றில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் தலைமன்னாரிலிருந்து தெற்குக்கரைக்குச்செல்லும் தெருவும் கஷ்டநிவாரணபணத்தைக்கொண்டு கல்லால் மதகுகளுடன் அமைத்து ஓர்கிரமமான கடற்தொழிற் பாதையாகக் கொள்ளப்படவேண்டும் என்றும் தீர்மானமாயிருக்கிறது.

### மாஜி சிவில்உத்தியோகஸ்தர்கள்

புதிய அரசியற்திட்டத்திலுள்ள நிபந்தனைகளின்படி அரசாங்கசேவையில் இருந்து இளைப்பாறத் தீர்மானஞ்செய்துகொண்ட உத்தியோகஸ்தர்கள் பலவிததொழில்துறைகளையும் தெரிந்திருக்கின்றார்கள். இவர்களிலே கடற்தொழிற்பகுதித்தலைவராயிருந்த டக்றர் சி. அமிர்தலிங்கம்அவர்கள் பாற்பண்ணை ஒன்றை நடத்தவிருக்கின்றார். முன்னர் ஐக்றிங் வித்தியாதலைவராயிருந்த திரு. டபிள்யு. ஏ. டி சில்வா அவர்கள் தற்போது வர்த்தகத்துறையில் ஈடுபட்டிருக்கின்றார். இவருடன் முன்னர் சுகாதார-ஸ்தலதாபன மந்திரி காரியாலயக் காரியதரிசியாயிருந்த திரு. ஏ. சி. எச். டி சொய்சா அவர்களும் சேர்ந்திருக்கின்றார். முன்னர் சுகாதார மந்திரி காரியாலய உடன்காரியதரிசியாயிருந்த திரு. ஈ. குணவர்த்தன அவர்கள் ஓர் அப்புக்காத்துவாகக் கடமை பார்க்கவிருக்கின்றார். அதேகாரியாலயத்தில் உதவிக்காரியதரிசியாகவிருந்த மற்றோர் இளவயசுடைய சிவிலுத்தியோகஸ்தர் கொழும்பிலே வாடகை மோட்டர்சேவைஒன்றை நடத்தவிருக்கின்றார்.

## இடது சாரிகள்

கடவுளுக்குச் சேவைசெய்வதும், மனுஷருக்குத் தன்னலமற்ற தொண்டு செய்வதுமே மனுஷவாழ்க்கையின் நோக்கமென நான் உணர்ந்தநாட் தொடக்கம் பலகாலமாகப் பொதுவுடைமைவாதிகளுடன் சேர்வதும், அவர்களுடைய அனற்பொறிபறக்கும் பிரசங்கங்கேட்டு ஆனந்தவெறிகொள்ளுவதுமாகத் திரிந்தேன். நான்மாத்திரமல்ல, சமத்துவம், சகோதரத்துவம்என்ற தெய்வீகக்கொள்கையுடைய பலவாலிபர்களும் இவர்கள்பின்னால் திரிந்தனர். இவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்கும்போது, ஆகா! எத்தனை உன்னத இலட்சியம்! இது நடைமுறைக்குவந்தால் இலங்கை பூலோகசுவர்க்கமாகி விடுமேஎன்று பலமுறைநான் வாய்நீர் வடித்திருக்கிறேன். அவர்களுடைய எளியவாழ்க்கைமுறையும்கூட என்னைக் கவர்ந்ததுண்டு. இன்று இடதுசாரிகள் போகிறபோக்கைப் பார்த்தால் தேளால் கொட்டப்பட்ட விசர்க்குரங்கு பச்சைமிளகாயைக் கடித்ததைதயாகவே இருக்கிறது. ஐயோ! இடதுசாரிகளே!

யாழ்ப்பாணமுற்றவெளியில் இந்த மும்மூர்த்திகளும் (பொதுவுடைமை, போல்ஷிவிக் லெனினிற்ஸ், சமசமாஜக் கட்சி) சென்றவருடத்தில் மாறிமாறிப் பேசினர். எத்தனையோதிருத்தங்கள் இலங்கையில் கொண்டுவரவேண்டும் என்று பேசினர். தங்களை ஆதரித்தால் இலங்கையை ஏதேன் தோட்டமாக்கிவிட முடியும்என முழங்கினர். சனங்களும் நம்பினர்.

அன்று யாழ்ப்பாண முனிசிப்பாலிற்றித் தெரிவின்போது அபேட்சகர்கள்கட்டிய ஆகாயக்கோட்டைகளையும், ஆகாயத்தாமரையில ஆத்தர்வடித்த கதைகளையும் பரிகசித்து ஒருவர்பாடினார். இதிலும் பெரும்பகிடியாக இந்த இடதுசாரிகளின் வாக்குறுதிகளும், பிரசங்கங்களும் இருந்தன. ஏனெனில், இந்தமும்மூர்த்திகளும் பேசியபோது யூ. என். பி. அரசாங்கத்தைக் கவிழ்த்ததும், வெள்ளையர்களைவெளுத்துவாங்கியதும், முதலாளிகளை(மேடையில்) முரியடித்ததும் எனக்கு ஆச்சரியத்தையாவது, அருவருப்பையாவது உண்டாக்கவில்லை. ஆனால், பொதுவுடைமைவாதிகள் சமசமாஜிகளையும், சமசமாஜிகள் போல்ஷிவிக்காரரையும் இவர்கள் அவர்களையும், அவர்கள்இவர்களையும் வாய்கொண்டமட்டும் திட்டினார்கள். கோட்டைக்குள்ளே நத்துமல்லா! என்று நான்வரயைப் பிளந்துகொண்டிருந்தபோது பலகேள்விகள் மேடைக்கு எழுத்துமூலம் சென்றன. முதலாளித்துவத்தை எதிர்க்கும்பாட்டாளிகளாகிய நீங்கள் ஒருவர்குடுமியை மற்றவர்பிடித்திருளுவதும், கோடேறி வழக்காடுவதும் என்னநியாயம்? என்று ஒருகேள்விகேட்கப்பட்டது.

போல்ஷிவிக்தலைவர் கூறினார்: இந்த மயிர்ப்பிடி நியாயத்துக்குக் காரணம் உண்டு. அது "சர்வதேசியபிரச்சினை" என்றுகூறினார். கம்பஹாத்தெரிவு முடிந்தவுடன் நடந்த அடிதடிச்சண்டைக்கும், கொழும்புநகர மேயர்தெரிவில் பொதுவுடைமைக்கட்சிபோட்ட பிரஷ்டஉத்தரவுக்கும் காரணங்கள் சர்வதேசியப் பிரச்சினையா? என்றுநான் யோசித்தபோது இலங்கைமக்கள்இன்னும் பொதுவுடைமையைப் பின்பற்றக்கூசுவதும், அதனைஅருவருப்பதும் சரிதான்என உணர்ந்தேன். பொதுவுடைமைச் சீனவில் புத்தகுருமார் தெருக்கூட்டுவதும், கிறீஸ்தமிஷனரிமார் பெரும் அலங்கோலப்படுவதும் பொதுவுடைமையின் இயற்கைத்தன்மையைக் காட்டுகின்றன. ருஷியாவில் கடுமையான தணிக்கைகள் செய்யப்பட்டும்கூடப் பலசெய்திகள் நமக்குக் கிடைக்கும்போது ருஷியாவில் சனநாயகமா? சர்வாதிகாரமா? என்று நாம் திகைக்கவேண்டியிருக்கிறது. லெனின் இருந்தது அந்தக்காலம்; ஸ்ராலின் இருப்பது இந்தக்காலம் என நாம் நினைக்கவேண்டியிருக்கின்றது. இத்தகையஇலட்சணத்தில் இலங்கையில் இந்தப்பொதுவுடைமைபரம்புவது நன்மைக்கா, தீமைக்காஎன்று தெய்வீக உணர்ச்சியுள்ளஎவரும் உணரக்கூடும். உணர்வார்கள்!

தந்திக்கம்பியை அறுப்பதும், தபாற கந்தோரை இடிப்பதும், பொலிஸ் ஸ்ரேஷனைப்பொசுக்குவதும்,முதலாளிகளின்முதுகை உரிப்பதும், கடவுட்பக்தர்களின் கால்களைமுரிப்பதும், தத்தமக்குள்ளே ஒருவர் மென்னியை (மிடறு) மற்றவர் பிடிப்பதும், ஒழுக்கக்கேடானநரகவாழ்க்கை வாழ்வதுமே உயர்ந்ததத்துவங்கள்என நம்புகின்ற இந்தப்பொதுவுடைமைவாதிகள் காந்திஜியின் அகிம்சையையும், நேருஜியின் போக்கையும், ராஜாஜியின் துறவு வாழ்க்கையையும்கூட மேடைகளிலே நாக்கில்நரம்பின்றித் தூஷித்துப்பேசுவதும், சபையில்சிலர் காகோஷம்செய்வதும் மனிததன்மையுள்ள எவர்க்கும் அருவருப்பையும், ஆச்சரியத்தையும் உண்டாக்குகின்றன. நுனிக்கொப்பிலிருந்து அடிக்கொப்பைவெட்டிய மேதாவியைப்போன்ற இவர்கள் செய்கையும் பேச்சும் இவர்களின்கட்சிப் பலவீனத்தையே எடுத்துக்காட்டுகின்றன. இவர்கள்நடந்துகொள்ளுகிற மாதிரிகளையும், ஒருஉசார்வெறியிலே பேசுகிற அனற்பொறிப் பேச்சுகளையும் பகுத்தறியக் கூடியவர்கட்கு இலேசில் யாவும் தெளிவாகும். ஏனையோருக்குத் தெளிவாவது கஷ்டந்தான்.

கொழும்புநகரசபை மேயர்தெரிவில் சமசமாஜ அனுதாபிஒருவருக்கு வாக்களித்ததுகுற்றமென்று பொதுவுடைமைக்கட்சி சன்னதம்கொண்டதையும், அகிலஉலகசமாதானத்துக்குக் கொழும்புக் காலிமுகக்களரியிலே பொதுவுடைமைக்கட்சி அத்திவாரமிட்டதையும் நினைக்கநினைக்க எனக்குச்சிரிப்பு வந்தது. அந்தச்சிரிப்பிலேதான் இந்தக்கட்டுரையும்வந்தது.

அகிம்சை, கடவுள்என்ற கொள்கைகள்அற்ற பொதுவுடைமைவாதிகள் சமாதானத்துக்குப் பாடுபடுவது,மாவில்லாமல் கூழ்காய்ச்சி, பூவில்லாமல் மாலைகட்டி... என்ற நாடோடிப் பாடலைத்தான் நமக்குஞாபகப்படுத்துகின்றது. அடிதடி மயிர்பிடிப் பொதுவுடைமை ஒழிக!

— விடிவெள்ளி (தி. க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அவர்கள் மூன்று சிறுவர்கள்"

## பத்திமா பதியில் தேவதாயார் அளித்த காட்சிகளின் விளக்கமான வரலாறுகள்

அதிவண. C. பாத்தாஸ் சுவாமி அவர்கள் பிராஞ்சியபாஷையில் பத்திமாவைப்பற்றி எழுதிய கவர்ச்சிக்குரிய ஓர் அருமையான நூல்

வண. சூ. ஆசீர்வாதம் சுவாமி அவர்களால் தமிழில் இசைத்து எழுதப்பட்டது.

உலகத்துக்கு ஓர்முக்கியமான சம்பவத்தை அறிவிக்கும்படியாகத் தேவதாயார் தெரிந்து காட்சிஅருளிய இயாசிந்தா, பிரான்சீஸ், லூசியாஎனும் மூன்று சிறிய இடைப்பிள்ளைகளின் சரிதையை இது அடக்கியது. 333 பக்கங்கள் அடங்கியது. தமிழிலே முதன்முதலாக அழகியபுத்தகரூபமாய் வெளிவந்திருக்கிறது. பத்திமாபதிச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களையும், காட்சிகளின் முழுஅர்த்தங்களையும் சரிவர அறிந்து கொள்வதற்குப் பெரிதும் பயன்படத்தக்கது.

மூன்று வேறுபட்ட முகம், அதுபோல மூன்று வேறுபட்ட ........ அந்த அலங்காரமான அதிசயம் என்ன? வானத்தின் அற்புதஅடையாளம்என்ன? காட்சிநாயகியின் பெயர் என்ன? அவர் பரலோகத்திலிருந்து கொண்டுவந்த செய்திஎன்ன? அந்த இரு பூலோக சம்மனசுகளின்........ இந்த மூன்று சிறுவர்களும் யாருக்கு? விசேஷமாக எவருக்கு? எவற்றில்? முன்மாதிரிகையாய் இருக்கின்றார்கள். எவருக்குவேண்டிய உதாரணங்கள், எவருக்கு ஏற்றவாசகங்கள், எவருக்குஏற்ற சிறந்தபுத்திமதிகள் இதில்அடங்கியிருக்கின்றன? காட்சிபெற்ற சிறுவர்கள் சொல்லிவந்த செபங்கள்எவை? இயாசிந்தா மரிக்கச் சிலநாட்களின்முன் கூறியவைகள் எவை? இந்த வினைக்களுக்கெல்லாம் இதிலேதகுந்த விடைகளைச் சரிவரக் கண்டுகொள்ளலாம். பத்திமாநாயகியின் கீர்த்தனங்களும், இடையிடையே காட்சிகளுடன் சம்பந்தப்பட்ட அநேக சித்திரப்படங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

ஒவ்வோர்கத்தோலிக்க இல்லமும் ஒவ்வோர் பத்தி மாபதியாக விளங்கவேண்டுமானால், பத்திமாநாயகியின் பத்தி தமிழ்நாடெங்கும் பரக்கவேண்டுமானால், கத்தோலிக்க தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் **அவர்கள் மூன்று சிறுவர்கள்** என்ற அழகானநாமம் பூண்ட இப்புத்தகத்தைப் படிக்கவேண்டியது அவசியம்.

விலை பிரதி ரூபா **2** சதம் **50**.

தபாற்கூலி சதம் **30**.

**கிடைக்கும் விலாசங்கள் :**

1. மனேஜர், அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.
2. கட்டளைச்சுவாமியார், பத்திமாகிரி, பண்டத்தெருப்பு.
3. திருக்குடும்ப கன்னிகாமடம், இளவாலை.

### வாழ்க்கைச்செலவின் ஏற்றம்

சென்றதைமாசத்துக்கு வாழ்க்கைச் செலவின்புள்ளித்தொகை 271 ஆக ஏற்றமடைந்திருக்கிறது. இது சென்றமார் கழிமாதத்தொகையாகிய 264 இலும் 7 புள்ளிஅதிகரித்திருக்கிறது. இந்த ஏற்றமானது, அடுத்தமாசத்திலே அரசாங்கம் தனதுஉத்தியோகஸ்தர்களுக்கும் பிறருக்கும் அதிகப்படியானசெலவுப்பணமாகக் கொடுப்பதற்கு மேலும் பத்துலட்சம்ரூபாவை வேண்டிநிற்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பர்மா அரிசியும் அதன்பிரதமரும்

ஏற்றுமதிசெய்வதற்கென்று தேவைக்குப்போதியதிலும் கூடுதலான அரிசியைப் பர்மாகொண்டிருக்கிறது. தன்னிடம்அரிசிவாங்கவிரும்புகின்றஇலங்கைக்கும், மற்றும்ஆசியநாடுகளுக்கும் அதனை ஏற்றுமதிசெய்யப் பெரிதும் ஆவலும் கரிசனையும் அதுகொண்டிருக்கிறது. பர்மாவிலுள்ள இலங்கைப் பிரதிநிதியும், பர்மாஅரசினரும் வர்த்தக உறவுகள்சம்பந்தமாய்க் கலந்து பேசிவருகின்றனர். இந்தப் பேச்சுகள் திருப்திகரமாக முடியுமென்று நான் நிச்சயமாயிருக்கிறேனெனத் தற்போது

### கவலையும் க்ஷயரோகமும்

நாஸிக் நகரிலுள்ள க்ஷயரோகத் தடை ஆஸ்பத்திரியைச்சேர்ந்த டக்றர் வி. பி. அதாவ்லேஅவர்கள் கூறுவது வருமாறு: "க்ஷயரோகத்தால் பீடிக்கப்படுகிறவர்களில் பெரும்பாலோர் கவலையால் மனம் உருகுபவர்களே. மிகப்பாரமான பொறுப்பை உடையவர்கள் அதைப்பற்றிக் கவலையுற்றுச் சதா அதைப்பற்றியே சிந்திப்பவர்களாய்த் தங்கள்வருமானம் அதிகரிப்பதற்காக அளவுக்குமேற்பட வேலையும் செய்துவருவதால் பசிதீபனங்குறைகின்றது. இதன்விளைவாக, அவர்களுடைய திரேகம் நலிவடைகின்றது. அதனால் க்ஷயரோகத்தை எதிர்த்து நின்றுபிடிக்குஞ்சக்தி குறைந்து போகின்றது. க்ஷயரோகக் கிருமிகள் நிறைந்திருக்கும் மிகமோசமான இடங்களில்வாழும் பிச்சைக்காரர்களை இந்த வியாதி அதிகமாகத் தீண்டுவதில்லை. அவர்கள் கவலையின்றிவாழ்வதே இதற்குக்காரணமாய் இருக்கவேண்டும். மனநிம்மதியே சரீரசுகத்திற்கு அத்தியாவசியகமாக வேண்டியது" என்பதே.

இலங்கையில்நிற்கும் பர்மாப் பிரதம மந்திரியார் தெரிவித்திருக்கின்றார்.

## பருத்தித்துறை தும்பளை

மாசிமாதம் **11**-ந்திகதி

## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

இத்திருநாளுக்கு ஆயத்தமாக மாசிமாதம் 1-ந்திகதி சாயந்தரம் 6 மணிக்கு நோவனை தொடங்கும்

**நிகழ்ச்சிகள் :—**

I மாசிமாதம் 10-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு மெழுகுவர்த்தித் தீபஅலங்காரச் சுற்றுப்பிரகாரம்.

II பிற்பகல் 7 மணிக்கு பிரசங்கம்.

III ,, 7-30 மணிக்கு மகாவந். மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் வேஸ்பர் ஆராதனை—தேவநற்கருணை ஆசீர்வாதம்.

IV 11-ந்திகதி காலை 7 மணிக்கு பாடற்பூசை.

திருக்கேபியில் யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு. மகாவந். மேற்றிராணியாண்டவர் சமுகமளிப்பார்.

கட்டளைக்தரு

## ஸ்ரீ B. F. சேவியர்ப்பிள்ளை அவர்களின் தேகவியோகம்

நம்பட்டணவாசராய், காலங்கண்ட பெரியமனுஷராய், பலராலும் பிரஸ்தாபமாக அறியப்பெற்றவராய், தேவபக்தி, குருபக்தி மிக்கவராய் நம்மிடையே விளங்கிவந்தவரும், கால் நூற்றாண்டளவாக ஆங்கிலபாதுகாவலன் பத்திரிகாலயத்தில் கடமையாற்றி இளைப்பாறியிருந்தவருமான ஸ்ரீ வஸ்தியாம்பிள்ளை பிரான்சீஸ் சேவியர்ப்பிள்ளை அவர்கள் விருத்தாப்பியநோய் கண்டிருந்து சென்ற 26-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் காலஞ்சென்ற துயரசெய்தியறிந்து பெரிதும் மனவருத்தமுற்றோம். மரிக்கும்போது இவருக்குவயசு 82.

இவர் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் சக்கிறிஸ்தாமாய் இருந்து காலஞ்சென்ற திரு. சவிரிமுத்து வஸ்தியாம்பிள்ளை அவர்களின் சிரேஷ்டபுதல்வர். சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்விபயின்றவர். நம்பட்டணத்திலேயே சீவியகாலம்முழுவதும் சஞ்சரித்திருந்தவரானஇவர் தாம்வகித்திருந்த பதவிகள்காரணமாகப் பலரையுமே நன்கறிந்தவராய், பலராலும் நன்கறியப்பெற்றவராய்ப் பிறரின்வாழ்வுதாழ்வுகளில் சிறப்பாகக்கலந்தும், மங்கல, அமங்கலசபைகளைப் பரிமளிக்கச் செய்தும்வரலாயினர். இவருக்கு நாலு புத்திரரும், மூன்றுபுத்திரிகளும் உள்ளனர். கொழும்புப் பெரியதபாற்கந்தோர் உபபோஸ்ற்மாஸ்றர் திரு. இம்மனுவேல் இராசரத்தினம், தெமட்டக்கொடை சென்ஜோன்ஸ் கல்லூரித் தலைவர் திரு. ஸ்ரனிஸ்லாஸ் இராசநாயகம், கொழும்பிலே கலகாக் கம்பெனியில் கடமைபார்க்கும் திரு. பெஞ்சமின் பிறெட்றிக் என்பவர்கள் புத்திரர்கள். வியாங்கொடை நேவிஸ்ரோறில் கடமைபார்க்கும் திரு. மரியாம்பிள்ளை எட்வாட் இவர்மருகர். ஜெயிலராகவிருந்துஇளைப்பாறிய திரு. பி. ஜே. பெனடிக்ற்அவர்களும், உபகலெக்றராயிருந்து இளைப்பாறிய திரு. பி. ஏ. டோமினிக்அவர்களும் இவர் சகோதரர்கள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை சாயங்காலம் இவரின்பிரேதசேமம் அதிசிறப்பாக நடந்தேறியது. நன்மரணயத்த சபையாரும், அர்ச். ஞானப்பிரகாசியார்கூட்ட அங்கத்தவர்களும் தத்தம் விருதுகொடிகளுடன் செபங்கள் ஓதி முன்னேசெல்ல, ஆசனக்கோயிற் கட்டளைக்குரவரைத் தலைமையாகக் கொண்டு நான்குகுருமார் தூக்கசங்கீதம்பாடிச்செல்ல, அழகிய முதிரைப் பேழையில் வைத்த பிரேதவண்டியின் பின் பெருந்திரளான இனசனர், சிநேகிதர் அநுதாபத்துடன்செல்ல, ஆசனக்கோவிலையடைந்து அங்கே பலகுருமார் சமூகமாக அந்திமதிருச்சடங்குகள் நிறைவேறியபின்னர் சேமக்காலையிலே வண. பி. ஏ. ஜோண்சுவாமியவர்கள் கடைசிஆசீர்வாதங் கூறிநிற்கப் பூமதானம் நடைபெறலாயிற்று. இவரை இழந்து துன்புறும் மனைவியார், புத்திரர், புத்திரிகள், மருகர், பௌத்திரர், சகோதரர், மற்றுமுள்ள இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

## பிரியதத்த வங்கி

### பிரியதத்தம்

| | |
|---|---|
| இதுவரையிற்சொல்லியது | 22,80,783 |
| கடந்தவாரம் சொல்லியது | 58,312 |
| மொத்தம் | 23,39,095 |

### செபமாலை

| | |
|---|---|
| இதுவரையிற்சொல்லியது | 1,78,063 |
| கடந்தவாரஞ்சொல்லியது | 3,990 |
| மொத்தம் | 1,82,053 |

## ஓர் அறிவித்தல்

சென் வின்சென்ற் டீ போல் தரும சபை, அர்ச். சூசையப்பர் பந்தியின் வருடாந்த பொதுக்கூட்டம் இந்தமாசிமாதம் 12-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை திவ்வியசற்பிரசாதஆசீர்வாதத்தின்பின் சென் சாள்ஸ்பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இப்பந்தியின் தருமவிஷயத்தில் ஊக்கமுடையவராயிருக்கும் சகலரையும் அத்தருணம் சமுகந்தரும்படி வெகுவினயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அர்ச். சூசையப்பர் பந்தியின் அங்கத்தவர்

ரூஷிய சிறைமுகாங்களிலே யப்பானிய போர்வீரரும், யப்பானிய சனங்களுமாக 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் இறந்திருப்பதாகச் ஸைபீரியாவிலிருந்து விடுவிக்கப்பட்டுச்சென்றவாரம் யப்பான்போய்ச்சேர்ந்த 2,500 யப்பானியபோர்வீரர்தெரிவித்திருக்கின்றனர். இவர்களும் சாப்பாடில்லாது மெலிந்தவர்களும், வைத்திய சிகிச்சை பெற வேண்டியவர்களுமாய் இருந்தார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேசவர்த்தமானம்

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணத்திலே நடைபெறும் மாசிச்சுப்பிறீங்கோடு இம்மாசம் 6-ந் திகதியாகிய வருகிறதிங்கட்கிழமை ஆரம்பமாகி நடந்தேறும். இம்முறை அதிலே விசாரணைக்கிருக்கும் வழக்குகள் 24. இவற்றிலே கொலைவழக்குகள் 15. சங். ஆர். எஸ். டயஸ் பண்டாரநாயக நீதியாசர் வந்து விசாரணை நடத்தவிருக்கின்றார்.

## பிரதமரின்யாழ்ப்பாணவிஜயம்

பிரதமமந்திரியாரான அதிகௌரவ டி. எஸ். சேனநாயகஅவர்கள் வருகிற சித்திரைமாசம் 11-ந்திகதி யாழ்ப்பாணத்துக்குவிஜயஞ்செய்து 13-ந்திகதிவரையிலே இங்குபலவிடங்களையும் சுற்றிப்பார்ப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. அவர் கமத்தொழில்மந்திரியாராய் இருந்தபோது, பரந்தன்-கிளிநொச்சிப் பகுதியைத் தரிசித்துப்போனதை அங்குள்ளகமக்காரர் ஞாபகத்தில்கொண்டுள்ளனர். அப்போது அவர் அங்கு கூடாரமில்லாத ஓர்மாட்டுவண்டியிலே சுற்றுப்பிரயாணஞ்செய்து நாடுபுற மாதிரியில் கூயா கூயாவென்று மாடுகளைஉரப்பி வண்டியைத்தாமே குதூகலத்துடன் செலுத்திச்சென்றாரென அவர்கள்கூறுகின்றனர். சமீபத்திலே அவர் வடஇலங்கைக்கு விஜயம்செய்யும்போது, அங்குள்ள புராதன குளங்களைத்தரிசிக்க வரவிருப்பதை ஆவலுடன் அவர்கள் எதிர்பார்த்தவண்ணமிருக்கின்றார்கள்.

## புதிய ஆசிரியகல்லூரி

யாழ்ப்பாணத்திலே ஓர் பிரதமஆங்கில ஆசிரியபயிற்சிக் கல்லூரியை ஸ்தாபிப்பதற்கான திட்டங்களைப்பற்றி வித்தியாபகுதி தற்போது ஆலோசித்துவருகின்றது. பயிற்சிபெற்ற ஆங்கிலஆசிரியர்கள் குறைவாயிருப்பதுகாரணமாகவே இக்தக்கல்லூரியை ஸ்தாபிக்க வேண்டுமெனத் தீர்மானஞ்செய்யப்படலாயிற்று. இதனை ஸ்தாபிப்பதன் பிரதானநோக்கம், சாகியங்களிடையே நேசபான்மையை வளர்ப்பதும், யாழ்ப்பாணத்தின்நிலைமைகளை அறிந்துகொள்ளச் சிங்களஆசிரியர்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பதுமாகும்.

## பலாலி ஆசிரியகல்லூரி

பலாலியில்இருந்துவருகின்ற ஆண்களின் ஆசிரியபயிற்சிக் கல்லூரியும், கோப்பாயில் இருந்துவருகின்ற பெண்களின் ஆசிரியபயிற்சிக் கல்லூரியும் ஒன்றுக்கப்பட்டு ஓர்கலவன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியாகக் கோப்பாயிலேஸ்தாபிக்கப்படவிருக்கிறது. தற்போது ஆசிரியர்களுக்கெனப் பதின்மூன்று அரசாங்கபயிற்சிக்கல்லூரிகள் இருந்துவருகின்றன. இவற்றிலிருந்து வருடந்தோறும் இரண்டாயிரம் ஆசிரியர்கள் பயிற்சிபெற்று வெளியேறுகின்றார்கள்.

## அப்போஸ்தோலிக்க தலைவர்

இந்தோ-சீனுவிலே லாஓஸ்நாட்டின் அப்போஸ்தொலிக்க தலைவரான மகாவந். ஜே. எச். மஸோயர்ஆண்டவர் இலங்கையைத் தரிசிக்கவந்து தற்போது நாவலெவியிலே தமது அந்தரங்க காரியதரிசியான வண. தோமஸ் நந்தாஎனும் சீனக்குருவானவருடன் தங்கியிருக்கின்றார். இவர் தாம்முன்னே ஒருதொகையான வருடங்களாகக் கட்டளைக்குரவாயிருந்த மொறட்டுவா அர்ச். செபஸ்தியார் கோவிலின் யூபிலி விழாவில் கலந்துகொள்ளலாயினர்.

## பர்மாவின் பிரதமர்

பர்மாதேச பிரதமமந்திரியாரான திரு. தாகின்நூ அவர்கள் தமதுபாரியார், புதல்விசமேதராய்ச் சென்ற வெள்ளிக்கிழமைகாலை ஓர் ஆகாயவிமானத்திலே கொழும்புவந்து சேரலாயினர். அவர்கள்வந்தவிமானம் பர்மா, இலங்கைக்கொடிகளைப் பறக்கவிட்டுக்கொண்டு வரலாயிற்று. விமானநிலையத்திலே இலங்கைப்பிரதமரும், போக்குவரத்து, உணவுமந்திரிமாரும், இலங்கையிலுள்ள பர்மா அரசாங்கப் பிரதிநிதியும் காத்துநின்று அவரை வரவேற்றனர். இலங்கையிலுள்ள விசேஷப்பட்ட புத்தவழிபாட்டுத் தலங்களைத் தரிசிப்பதற்கென்றே இவர்வரலாயினர். கண்டியிலுள்ள தாலத மாளிகையைத் தரிசித்தபோது இவருக்கெனப் புத்தரின்தந்தம் விசேஷ விதமாகக் காட்சிக்கு வைக்கப்படலாயிற்று.

## கலியாணமும் கார்விபத்தும்

கொட்டிகாவத்தையிலே ஓர்வியாபாரியான டொன் சாள்ஸ் அப்புஹாமி என்பவரின் மனைவியான பேபி நோனு எனும்மாதும், அவளின் இருபுதல்வரும் சென்றபுதன்கிழமை அங்குநிகழ்ந்த ஓர்கலியாணத்துக்குச் சமுகங்கொடுத்துவிட்டுப் பின்னர் அம்பேப்புசையிலுள்ள மாப்பிள்ளையின்வீட்டுக்கு ஓர் காரிலே ஏனையோருடன் ஊர்வலமாகச் சென்றபோது கலெலியாஎனுமிடத்திலே இவர்கள்சென்றகார் ஓர்நெல்வயலுட்சென்றுபுரண்டு தீப்பற்றிக்கொண்டது. பேபிநோனு அதில்எரிந்து இறந்துபோனுள். புதல்வர்கள்இருவரும் எரிகாயங்களுடன் கொழும்புப் பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார்கள். அங்கே இளைய மகனின்நிலைமைஅபாயகரமாய்இருந்து வருகிறதாம்.

## மஸ்கேலியா உபதேர்தல்

திரு. ஜோர்ஜ் ஆர். மோத்தா அவர்களின் மரணத்தாலே பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையில் காலியாகவிருக்கும் மஸ்கேலியாத்தொகுதி ஸ்தானத்துக்கு இலங்கை - இந்திய காங்கிறஸ் அங்கத்தவர்களான திரு. ஏ. அசிஸ், திரு. ஜி. ஆர். இராஜப்பிரியர் எனும் இருவர் போட்டியிலே முற்பட்டுச் சென்றசனிக்கிழமை கண்டிக்கச்சேரியிலே தங்கள்நியமன பத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர். இவர்களிலே முந்தியவர் இலங்கை - இந்திய காங்கிறஸ்தலைவராக முன்னர் இருந்தவர். பிந்தியவர் முன்னே பாராளுமன்றத் தேர்தலிலே கலகாத்தொகுதிக்கு அபேட்சகராகநின்று தோல்வியுற்றவர்.

## இலங்கையும் அமெரிக்கரும்

இற்றைக்கு ஒருவருடத்தின்முன்னர் இலங்கையில் 92 அமெரிக்கரே இருந்துவந்தனர். ஆனால், இப்போதோ அவர்கள்தொகை 223 பேராக அதிகரித்திருக்கின்றது. இதற்குக்காரணம் கல்லோயாத்திட்ட ஒப்பந்தத்தில் 80 பேர்வந்து ஈடுபட்டிருப்பதும், அ. ஐ. தேச ஸ்தானீகர் காரியாலயத்தைச் சேர்ந்தவர்களாய்ப் 17 பேரும், அவர்கள்குடும்பத்தினராய் 17 பேரும் வந்திருப்பதுமே. கொழும்பிலே பெற்றோலியம் கம்பெனிமுதலாம் வர்த்தக சமுதாயங்களில் கடமைபார்ப்போராயும், யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் மிஷனரிமாராயும் அமெரிக்கர் அநேகர் இருந்துவருகின்றார்கள்.

## புதிய றெஸ்ற் ஹவுஸ்

புத்தளத்துக்கும், அனுராசபுரத்துக்கும் இடையிலே விரைவில் ஓர்றெஸ்ற் ஹவுஸ் அமைக்கப்படவேண்டுமென்று அனுராசபுர மாகாண றோட்கொம்மிற்றி தீர்மானித்திருக்கிறது. அதனை அமைப்பது வேட்டைக்காரருக்கும், யாத்திரிகருக்கும், அரசாங்கஉத்தியோகஸ்தர்களுக்கும் பெரியநன்மையாய் இருக்குமாம். வடமத்தியமாகாண எல்லையிலுள்ள காளஓயாவின்பக்கமாய் இதற்குத்தகுதியான ஓரிடம் தாமதமின்றித்தெரிவுசெய்யப்படவிருக்கிறது.

---

❀ பரிசுத்தபாப்பரசர் அநேக புதிய கருதினுல்மார்களை ஆக்குவதற்காக இந்த மாசிமாதத்திலே கருதினுல்மார் திருச்சங்கத்தைக் கூட்டலாமென றோமாபுரியிலுள்ள ஏ. ஆர். ஐ. செய்திஸ்தாபனம் அறிவிக்கின்றது. நவமாக ஆக்கப்படவிருக்கும் புதிய கருதினுல்மாருள் இந்திய கருதினுலும் ஒருவராயிருப்பார்.

நல்லூர்மீசாம்

## கற்தரையும் கனிகொடுக்குமா?

தனிமைஉணர்ச்சி நம்மைத்தாக்குகின்றது. மேலேபார்த்தால் நீலமேகம். அத்தோடு கார்மேகமும். கீழேபார்த்தால் பயங்காத்தைஉறுத்தும கற்பாறைகள் விழித்துப்பார்க்கின்றன. சனசந்தடியோ கிடையாது. தூரத்தில் சோசோஎன்று ஓர்சப்தம் கேட்கிறது. ஓர்இடையன் தனதுஆடுகளை அழைக்கிறுனுக்கும். அண்மையிலே "அடியடாபிடியடா" என்று மற்றோர்சப்தம் அச்சுறுத்தும்பான்மையாய் இருக்கிறது. இடையர்கள் இரண்டுபேரின் "சண்டை சளப்"பாக்கும். இடையிடையே நிழல்போல அசைந்தாடும் உருவத்தைக்கண்டால் ஆரோஒருமனிதன் என்பார்கள். இவைமாத்திரமே இங்குள்ள மனிதசஞ்சாரம். என்றாலும் வருங்காலத்தில் 50 குடிகளுக்கு மேல் வசிக்கும் ஓர்கிராமமாய் வருமென்றுசொன்னுர் வண. ஞானப்பிரகாசர்சுவாமியார்.

அன்றொருநாள் மகாவந். கியோமார் ஆண்டவர் அவர்கள் இவ்விடத்தைத்தரிசித்தபோது சொன்னதாவது: "இது எவ்வளவு உகப்பான இடம். தூரநோக்குள்ள ஞானப்பிரகாசர்சுவாமியாரால் மாத்திரம இவ்விடத்தைத் தெரிந்துகொள்ளமுடியும். ஒருபக்கத்தில் அச்சுவேலி, வசாவிளான், கொட்டகப்புலம். மறுபக்கத்தில் புத்தூர். இன்னோர்பக்கத்தில் புத்தூர் கிருஷிகஸ்தாபனம். கியோமார்புரி இவற்றின்மத்தியிலே ஓர் காலம் மிகப்புழக்கமும், சனப்பெருக்கமுமான இடமாகும். இவ்விடத்தைத் திருத்தியெடுப்பதில் செலவிடும்பணம் வீண்போகமாட்டாது." பெரியோர் கூற்றும, அர்ச். றீத்தம்மாளின் அனுக்கிரகமுமே எமதுநம்பிக்கை.

அர்ச். றீத்தம்மாள் முன்சிலுவையையும் பின்ஆறுதலையும்கொடுக்கும் ஓர்அர்ச்சியசிஷ்டவள். சிலுவைப்பாகம எமதுமுன்னோருக்கு உரியதாய்விட்டது. வண. ஞானப்பிரகாசர் சுவாமியார் இரத்தஞ்சிந்தாததுதான் ஓர்குறை. பன்னிரண்டுவருடங்களாக இவ்விடத்தில் அவருக்குநேர்ந்த நெருக்கிடைகள் இம்மட்டன்று. அதனுல்தான் "கியோமார்புரி அர்ச். றீத்தம்மாள் நமக்குஅனுப்பிய சிலுவை; ஆயினும்எவராலும் முடியாதகாரியங்களைச் செய்யவல்ல இந்த அர்ச்சியசிஷ்டவள் நமக்குப்பின் வருவோருக்காவது ஆறுதலஅளிப்பா"வென்று கூறினார்.

சிலுவையின்காலம் ஒழிந்து, ஆறுதலின்காலம் தொடங்கிவிட்டதுபோல தோன்றுகிறது. சமாதானத்தைஅருளத்தேவன் சித்தமிரங்கிவிட்டார். அரைகுறையாகமுடிந்த ஓர்கோவில், இரண்டு கிணறுகள், கல்லுக்கிழப்பப்பட்ட சிலபரப்புநிலம், புதிதாக நாட்டப்பட்ட சிலமாக்கன்றுகள், இரண்டு குடிகள். இவைதான் கியோமார்புரியின் தற்போதைய நிலைமையாகும். கற்தரைதானும் கனிகொடுக்குமௌற கருத்துப்பட இங்கே இம்மாசம் 22-ந் திகதி கொண்டாடப்பட்ட திருநாளுக்குச் சமுகம்கொடுத்தபலரும் பேசிக்கொண்டது எமக்கு வெகுதென்பை அளித்தது.

## உமதுபேரில் நாம் வைத்தநம்பிக்கை வீண்போதுமா?

தென்கோப்பாயிலே ஓர்இளம்பெண் காயாசுவாதத்திலை பீடிக்கப்பட்டு வருந்தி மானிப்பாய்ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டாள். சிலநாட்களின்பின் பிள்ளைபிறந்ததும அவள் பெலன்குன்றிச் சரீரமெல்லாம் குளிர்ந்துபோனது. டக்றர்மாரும், நேர்ஸ்மாரும் நோயாளி உயிர்பிழைப்பதைப்பற்றி ஐயுறவுகொண்டு: "நாங்களேனும் உங்களைக்கொண்டுபோங்களென்றும் சொல்லோம்; கொண்டுபோகாதேயுங்கள்என்றும் சொல்லமாட்டோம்" என்றார்கள். வருத்தம்பார்க்கப்போனுர் பலர் ஆஸ்பத்திரியிலும் சீவன்போக விடுகிறதாஎன்றார்கள். ஆனுல், ஒருவர், வீட்டுக்குக்கொண்டுபோய் என்னதான்செய்யலாம்; இங்கேயே வைத்திருங்கள்; செபமாலைமாதாவை நம்புங்கள்என்று மறித்துவிட்டார். அந்த நேரந்தொடக்கம் அங்குநின்றோரும் வருத்தம்பார்க்கச்சென்றோரும் வருத்தக்காரியின் படுக்கையைச்சூழ முழந்தாளிட்டு எல்லோருக்கும் கேட்கத்தக்கதாக வண. ஞானப்பிரகாசர்சுவாமியார்சொல்லிக்கொடுத்த இராகத்தோடு செபமாலையை இரவும்பகலும் தொடர்பாக மூன்றுநாட்களாகச் சொன்னார்கள். மூன்றுநாட்களின்பின் சுகக்குறிகள் தோன்றின. செபமாலைமாதாவின் சலுகையால் இப்போ சுகம். இதைக்கண்ட பலரும் "அதுகள் மூன்றுநாளாகப் பாடினபாட்டாலல்லோ அங்காலே போனசீவன் பேந்தும் இங்காலேவந்தது" என்று பாராட்டினார்கள்.

## முத். மாட்டீன் தே போறேஸ்

"எனக்குண்டான பணக்கஷ்டத்திலிருந்து என்னைநீக்கும்படி முத்திப்பேறுபெற்ற மாட்டீன் தே போறெசையும் யேசுவின்திருஇருதயத்தையும் விநயமாய்மன்றாடி ஓர்நோவனைசெய்தேன். எதிர்பாராதவிதமாக என்மன்றாட்டுக் கேட்கப்பட்டது. அதற்கு நன்றியாக இத்தொகையைத் தங்கள் மீசாம்தொண்டுகளுக்கும் தருமத்துக்கும்அனுப்புகிறேன். முத். மாட்டீன் தே போறெசின்பெயர் பிரபல்யமடைய இதைப்பிரசாஞ்செய்யவும்." (பெரியவிழான்)

"அர்ச். அந்தோனியார்போாலும், அர்ச். சின்னத்தெரேசம்மாள் பேராலும் நான்செய்துகொண்ட நேர்த்திப் பணத்தைத் தங்கள்முட்டுப்பட்டமீசாமின் விசேஷதொண்டுக்கு உதவும் என்றுநினைத்துத் தங்களுக்கு அனுப்புகின்றேன்." (சில்லாலை)

மகாவந். மேற்றிராணிபாண்டவர் அவர்கள் இவ்விதநேர்த்திப்பணத்தை மீசாம்தொண்டுகளுக்குப் பாவிப்பதை அனுமதித்துள்ளார். உங்கள்நேர்த்திகளில் எமதுமீசாமை நினைவுகூருங்கள்.

ஓடர் அனுப்புவது:
Sub-Post office,
NALLUR.

எனது விலாசம்:
Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

---

❀ லண்டன் நகருக்கும் கல்கத்தாவுக்குமிடையே ஆகாயப்பிரயாண சேவை நடத்திவருகின்ற பி. ஓ. ஏ. சி. கம்பெனி விமானங்கள் சென்ற தைமாதம் 19-ந் திகதி முதல் மோல்தாதீவில் தரிப்பதற்குப்பதில் பரிசுத்த வருட திருயாத்திரையின் மத்தியதானமாகிய றோமைநகரிலே தங்கிவருகின்றது. இதற்குக்காரணம் இந்திய யாத்திரிகருக்கு அதிகமான யாத்திரைவசதி அளிப்பதேயாகும்.

❀ அமெரிக்கஐக்கியதேச ஆகாயப்படை "ஊசிமுக்குப் போர்விமானம்" என்று ஓர் புதிய போராடும் விமானத்தை நவமாகக் கண்டுபிடித்துச் செய்திருக்கிறது. இதன்நாமம் எக்ஸ். எவ்.—90 என்பது. ஆகாயத்தில் நின்றும், கரை இலக்குகளை நோக்கியும் போராடுவதிலும், அதிக வேகமாகத் தூரமான இடத்துக்குப் பறந்து செல்வதிலும் இது மகாவிசேஷப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேத வினவிடை

— V —

சுதனனவர் எங்கள் மீட்பர்

### (1) ஞானஸ்நானம்.

25. ஞானஸ்நானம் ஆவது என்ன?
சென்மபாவத்தையும், அதைநீக்கிவிட முதற்செய்த கன்மபாவங்களையும் போக்கி, நம்மை நீதிமான்களாகவும் சருவேசுரனுடைய பிள்ளைகளாகவும் ஆக்கி, விசுவாசவழியில்நடக்க நமக்குத் தேவஉதவியைத்தரும் திவ்வியனுமானமே ஞானஸ்நானம்.

"கிறீஸ்துநாதர் சலஞானஸ்நானத்தால் திருச்சபையைச் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்க தம்மைத் தாம் கையளித்தாரே" — எபே. V. 26—27.

26. ஞானஸ்நானம் யேசுநாதரால் ஏற்படுத்தப்பட்டதா?
ஆம். அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு உலகமெங்கும்போய்ச் சகல சாதி சனங்களுக்கும் உபதேசித்து, "பிதாவுடையவும் சுதனுடையவும் பரிசுத்தஆவியுடையவும் நாமத்தினுலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்" என்று சொல்லி அதை ஏற்படுத்தினர். (மத். XXVIII. 19.

27. ஞானஸ்நானத்தின் திவ்வியனுமானப் பொருள்என்ன?
சரீரத்தைத் தண்ணீரால் கழுவுதல்தான்.

28. எப்படிப்பட்ட தண்ணீரை) ஞானஸ்நானத்துக்குப் பாவிக்கலாம்?
பொதுவாகக் குருவானவரால் மந்திரிக்கப்பட்ட ஞானஸ்நானத் தண்ணீரைப் பாவிக்கவேண்டும். அவசியமானசமயங்களில் கிணறு, குளம், ஆறு, கடல்களிலுள்ள சாதாரணதண்ணீரை உபயோகிக்கலாம். வாசனைநீர், எண்ணெய், இரசம், பால் முதலியவைகள் சாதாரண தண்ணீர்அல்ல.

29. ஞானஸ்நானத்தின் மாத்திரை என்ன?
"பிதாவுடையவும் சுதனுடையவும் பரிசுத்த ஆவியுடையவும் நாமத்தினுலே நான் உன்னைக் கழுவுகிறேன்" என்னும் வார்த்தைகள்தான்.

30. ஞானஸ்நானத்தின் மாத்திரை வார்த்தைகளை எப்படிச் சொல்லவேண்டும்?
அவைகளை வாயாலே உச்சரித்து, ஒன்றும் மாற்றுமல், தலைமேல் தண்ணீர் வார்க்கும்போது அப்படி வார்க்கிறவன் தானே சொல்லவேண்டும். மாத்திரை வார்த்தைகளுக்குமுன் ஞானஸ்நானத்தில் சூட்டப்படுகிற நாமத்தைச் சொல்லலாம.

31. ஞானஸ்நானத்தில் எப்படிப்பட்ட நாமத்தைச் சூட்டவேண்டும்?
அர்ச்சியசிஷ்டர்களுடைய நாமங்களில் ஒன்றையே சூட்டவேணுமென்றும், வேறுநாமத்தைப் பெற்றூர் விரும்பினுல் அதோடு அர்ச்சியசிஷ்டர்களுடைய நாமங்களில் ஒன்றையும் சேர்க்கவேணுமென்றும் திருச்சபை கற்பிக்கின்றது.

32. ஞானஸ்நானம் கொடுக்க அதிகாரி ஆர்?
ஞானஸ்நானம்கொடுக்கச்சாதாரண அதிகாரி குருவானவரே. ஆனல் அவஸ்தைசமயத்தில் திருச்சபைசெய்கிறதை நானும் செய்கிறேன் என்ற கருத்துடன் ஆராகிலும் அதைச்சடங்கில்லாமல் கொடுக்கலாம.

33. நமக்குத் தண்ணீர் ஞானஸ்நானம்கொடுக்க ஒருவருமில்லாவிட்டால், நாம் இரட்சிக்கப்படலாமா?
ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ள உண்மையாக ஆசைப்பட்டால், அல்லது வேதசாட்சிகளாக மரித்தால் இரட்சிக்கப்படுவோம்.

"சிநேகமுள்ளவனெவனும் சருவேசுரனுல் பிறக்கிறுன்" — 1. அரு. IV. 7.

"என்னிமித்தம் தன்சீவனை இழக்தவனேவென்றால் அதைக்கண்டடைவான்" —மத். X. 39.

34. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளத் தகுதியாளி ஆர்?
குழந்தைகள் ஒரு ஆயத்தமுமில்லாமல் பெற்றுக்கொள்ளலாம். புத்திவிபரம் அறிந்தவர்கள் முழுமனதோடு திவ்வியனுமானப்பலனுடன் பெற்றுக்கொள்ளலாம். ஆனல் பிரசாதப்பலனுடன் பெற்றுக்கொள்ளச் சருவேசுரனில் நம்பிக்கையுள்ள விசுவாசமும் சாவானபாவங்களுக்குப் பயம்பொருந்திய மனஸ்தாபமென்கிலும் வேண்டும்.

"விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சணியமடைவான்"—மாற். XVI. 16.

"நீங்கள தவஞ்செய்து, உங்கள் பாவங்களின் மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறக்கடவீர்கள்"—அப். நட. II. 38.

35. நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது என்ன வாக்குத்தத்தம் பண்ணுகிறோம்?
பிசாசையும் அதன் கிரியைகளையும் ஆடம்பரங்களையும் விட்டுவிடுகிறோமென்றும், யேசுநாதருடைய வேதத்தைப் பற்றிக்கொண்டு அதன்படியே நடப்போமென்றும் வாக்குத்தத்தம் பண்ணுகிறோம்.

36. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு ஞானத்தாய் தந்தையரை நியமிப்பதேன்?
தங்கள் ஞானப்பிள்ளைகளை ஞானஸ்நானநோத்தில் தொட்டு அவர்களைத் திருச்சபைக்கு ஒப்புக்கொடுக்கவும், அவர்கள் செய்யும் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குப் பிணையாய் நிற்கவும்தான்.

37. ஞானத்தாய் தந்தையருடைய கடமைகள் எவை?
தங்கள் ஞானப்பிள்ளைகள் வேதசத்தியங்களை நன்றாய்க்கற்று நல்லகிறீஸ்தவர்களாய் நடக்கும்படி விசாரிப்பதும், அவர்களுக்கு முன்மாதிரிகையாய் இருப்பதுமாம். ஆகையால் அவர்கள் முறையான கத்தோலிக்கராயும் பாஸ்குக்கடமை தீர்த்தவர்களாயும் இருக்க வேண்டுப்.

38. மனித இரட்சணியத்துக்கு ஞானஸ்நானம் அவசியமா?
ஆம். அது அவசியந்தான் என்று கர்த்தர் திருவுளம்பற்றியிருக்கிறூர்.

"ஒருவன் சலத்தினுலும் இஸ்பிரீத்துசாந்துவினுலும் மறுபடியும் பிறவாதிருக்கில் சருவேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான்" — அரு. III. 5.

39. குழந்தைகளுக்குக் கூடியசீக்காத்தில் ஞானஸ்நானம் கொடுப்பிப்பது பெருங்கடமையா?
ஆம். அதைக் கொடுப்பிக்கத் தாமதம்பண்ணுகிறது பாவமாகும். விசேஷமாய் அவஸ்தைசமயத்தில் அதைக் கொடுக்க நாம் சகலரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

40. நாம் ஞானஸ்நானத்தில் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் எவை?
நாம் சருவேசுரனுடைய பிள்ளைகள் என்று காட்டும் ஞானமுத்திரையும், சென்ம கன்ம பாவங்களைப்போக்கி நம்மில் ஞானசீவியத்தைப் பிறப்பிக்கிற நீதிமானுக்கும் பிரசாதமும், நமது பாவங்களுக்குரிய அநித்திய ஆக்கினைக் கடனை முழுதாகத்தீர்க்கும் உத்தரிப்புப்பேறும், நாம் உத்தம விசுவாசிகளாய்ச் சீவிக்கப்பண்ணுகிற திவ்வியனுமானப் பிரசாதமுமாம்.

"நீங்கள் சருவேசுரனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள். எப்படியெனில், கிறீஸ்துநாதரிடத்தில் ஞானஸ்நானம்பெற்றிருக்கிற நீங்களெல்லோரும் கிறீஸ்துநாதரை அணிந்து கொண்டிருக்கிறீர்கள்"—கலா. IV 26—27.

"பாவங்களின் மன்னிப்புக்காக உங்களில் ஒவ்வொருவனும் ஞானஸ்நானம் பெறக்கடவான்; அப்பொழுது இஸ்பிரீத்துசாந்துவின் வாத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்"—அப். நட. II. 38

"கிறீஸ்துயேசுநாதருக்கு உட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாதவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு யாதேனுமில்லை"—உரோ. VIII. 1.

"கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்ததுபோல, நாமும் புதிதானசீவியமுள்ளவர்களாய் நடந்துவரும் பொருட்டுஞானஸ்நானத்தினுலே (பாவத்துக்குச்) சாகும்படி அவரோடுகூட நாமும் அடக்கம்பண்ணப்பட்டோம்" — உரோ. VI. 41.

41. ஞானமுத்திரை ஆவது என்ன?
நாம் சருவேசுரனுடைய பிள்ளை அல்லது வீரன் அல்லது ஸ்தானுபதி என்று காட்டும்பொருட்டு ஆத்துமத்திலே ஒருபோதும் அழியாதவிதமாய்ப் பதித்திருக்கிற அடையாளமேயாம். ஞானமுத்திரையை நம்மில்பதிக்கிறவை ஞானஸ்நானமும் உறுதிப்பூசுதலும் குருத்துவமுமாகிய ஒருமுறை மாத்திரம பெற்றுக்கொள்ளப்படுகிற திவ்வியனுமானங்களாம்.

42. நீதிமானுக்கும்பிரசாதம் ஆவது என்ன?
நாம் சென்ம அல்லது கன்ம பாவத்தால் இழந்துபோன ஞானச்சீவியத்தை மறுபடியும் நமக்குத்தருகிற நிலைப்பிரசாதமேயாம். நீதிமானுக்கும் பிரசாதத்தை நமக்குத் தருகிறவை ஞானஸ்நானமும் பச்சாத்தாபமுமாகியமரித்தோருடைய திவ்வியனுமானங்களாம்.

43. பரிசுத்தமாக்கும் பிரசாதம் ஆவது என்ன?
நம்மில் நிலைநிற்கும் ஞானச்சீவியத்தை இன்னும் அதிகப்படுத்துகிற நிலைப்பிரசாதமேயாம். பரிசுத்தமாக்கும் பிரசாதத்தை நமக்குத்தருகிறவை நற்கருணையும் மெய்விவாகமும் உறுதிப்பூசுதலும் அவஸ்தைப்பூசுதலும் குருத்துவமுமாகிய சீவியருடைய திவ்வியனுமானங்களாம்.

44. திவ்வியனுமானப்பிரசாதம் ஆவது என்ன?
ஒவ்வொரு திவ்வியனுமானத்துக்குரிய விசேஷகடமைகளைச் செய்வதற்கு அவசியமான செயற்பிரசாதங்களில் அந்தத்திவ்வியனுமானம் நமக்குத்தரும்உரிமையேயாம்.

---

பாலைதீவு

## அர்ச். அந்தோனியார் திருநாள்

## 12-3-50



இத்திருநாள் மகோற்சவம் பங்குனி மாதம் 7-ந்திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவாகும். 11-ந்திகதி சனிக்கிழமை அர்ச். அந்தோனியார் திருச்சுரூபம் வீதிகொண்டு சுற்றுப் பிரகாரம் செய்யப்பெறும். ஞாயிற்றுக்கிழமை 4.30 மணிக்கும், 7 மணிக்கும் திவ்வியபூசைகள் நிறைவேறும். யாத்திரிகரின் ஞானகடமைகளைக் கவனிப்பதற்குப் பலகுருப்பிரசாதிகள் திருப்பதியிலே சமுகமாயிருப்பார்கள்.

1-வது பெரியகடல் லைசென்சுள்ள மோட்டார்லான்சுகளுக்கு மாத்திரம் பாலைதீவுக்குப் பிரயாணஞ்செய்ய லைசென்ஸ் கொடுக்கப்படும்.

2-வது **வத்தைகளிலும், மோட்டர் லான்சுகளிலும் லைசென்ஸின்படி பிரயாணிகளை ஏற்றவேண்டும்.**

3-வது தண்ணீர் குறைவாயிருப்பதினுல் கூடியளவு வத்தைக்காரரும், யாத்திரிகரும் தண்ணீர்கொண்டுபோகக் கடவார்கள்.

4-வது **செபமாலைக் கடைகளும், தேநீர்—உணவுகடைகளும்மாத்திரமே கட்டலாம்.**

5-வது கடைகட்ட விரும்புகிறவர்கள் கட்டளைச்சுவாமியாரிடம உத்தரவு கேட்கவேண்டும். தீன்பண்டங்களைக் கண்ணடிப்பெட்டிகளில் வைத்துக் காப்பாற்றவேண்டும்.

**இந்தக்கட்டளைக்கு அமையாதவர்களின் உணவுகள் இவ்வருடமுதல் பறிமுதலாக்கப்படும்.**

கட்டளைக்குரு

---

### இளைப்பாறும் நீதியரசர்கள்

பிரதமநீதியரசராகிய சேர் ஆர்தர் விஜயவர்த்தன அவர்கள் வருகிறபங்குனிமாசத்திலே தமதுபதவியினின்றும் இளைப்பாறவிருக்கின்றூர். சுப்பிறீங்கோட்டுப் பிரதமஉபநீதியரசராகிய சங். ஈ. ஜி. பி. ஜயதிலகஅவர்கள் ஐப்பசிமாசத்திலே இளைப்பாறுவார். சுப்பிறீங்கோட்டிலே வருகிறபங்குனிமாசம் காலியாகும் ஸ்தானத்துக்கு ஐக்கியதேசியக்கட்சியைச்சேர்ந்த பிரபல சென்ற்றர்ஒருவர் நியமனஞ்செய்யப்படுவார்போல் இருக்கிறது.

### கொள்ளை-கொலை வழக்கு

குதிரைப்பந்தையக்கிளப் கொள்ளை-கொலைவழக்கு சென்ற 24-ந் திகதி செவ்வாய்க்கிழமைமுதல் கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே பிரதமநீதியரசரால் விசாரணைசெய்யப்பட்டுவருகிறது. இதிலே (1) எச். ஜில்பேட் டயஸ் (2) எம். வில்சன் (3) எஸ். லூயிஸ் (4) என். ஏ. சைமன் சில்வா ஜயசிங்க (5) எம். விஜயதாச பெறேரா (6) எம். ஏ. எல். வார்லிஸ் முனசிங்க (7) எம். ஏ. டொன்ஜேம்ஸ்செனெவிரத்ன (8) ஆர். எல். ஜே. பிரேமலால்எனும் எட்டுப் பேர் எதிரிகள். இவர்களிலே நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. (1) குதிரைப்பந்தையக்கிளப் கஷியரிடமிருந்து பணத்தையும், செக்குகளையும் கொள்ளையடிக்கச் சதியாலோசனைபண்ணி அவ்வாறுசெய்தது. (2) ஆம்ஸ்ரோங் கறேஜ் சாரதியான சே. ஜோண் சில்வா என்பவரைக்கொல்லச் சதிபண்ணி அவ்வாறு செய்தது. (3) 5-ம் 7-ம் 8-ம் எதிரிகள் அவரைக்கொலைசெய்தது. (4) 1-ம் 2-ம் 3-ம் 4-ம் 6-மஎதிரிகள் அக்கொலைக்கு உடந்தையாயிருந்தது. தாங்கள்குற்றவாளிகள்அல்லவென்று எதிரிகள் கூறியிருக்கின்றூர்கள். இவ்வழக்கில் விசாரணைசெய்யப்படவேண்டிய சாட்சிகள் 160 பேர். வழக்குவிசாரணையிலே முடிக்குரியமுதற்சாட்சியாகிய ரூபானந்த டி சில்வா என்பவர் இருதினங்களாகக் கூறியவைகளைக் கொழும்புத் தினவர்த்தமானிகளில் படித்தபோது பண்டாரக்குளா, தெல்லிப்பழைக் கொலைவழக்குகளை ஞாபகத்துக்குக் கொண்டுவரலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவிசேஷ வாசிப்பு

( 1-ம் பக்கத்தொடர்ச்சி )

மாய்ப்பெற்றுக்கொள்ளப்போவதாக எண்ணினர்கள். ஆயினும், அவர்களும் ஒவ்வொரு தெனியர்தான் வாங்கினர்கள். அதை வாங்குகையில் குடும்பத்து எசமான்பேரில் முறையிட்டு: கடைசியில் வந்தவர்களாகிய இவர்கள் ஒருமணிநேரமாத்திரம் வேலைசெய்திருந்தும், பகற்பாரத்தையும் வெய்யில் அகோரத்தையும் சுமந்தவர்களாகிய எங்களோடு இவர்களையும் சரிசமானமாக்கினீரே என்றார்கள். அவனே அவர்களில் ஒருவனைநோக்கி மறுமொழியாக: நண்பனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை; நீ என்னோடு ஒத்துக்கொண்டது ஒரு தெனியர் அல்லவோ? உன்னுடையதை நீ எடுத்துப்போ; உனக்குக் கொடுத்ததுபோல் கடைசியில் வந்த இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். அல்லது நான் விரும்புகிறதைச் செய்ய எனக்குச் சுதந்திரமில்லையோ? அல்லது நான் நல்லவனுய் இருக்கிறபடியால் உன்கண் கெட்டதோ என்றான். இவ்வண்ணமே கடைசியானவர்கள் முதலானவர்களாகவும், முதலானவர்கள் கடைசியானவர்களாகவும் இருப்பார்கள்; ஏனெனில், அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சொற்பப்பேராயிருக்கிறார்கள் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

தத்துவவழக்கு
இல. 950.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோடு
காலஞ்சென்ற முருகேசு கதிரவேற்
பிள்ளையின் ஆதனத்துக்குத் தத்துவம்
காலஞ்சென்றவர்

வட்டுக்கோட்டை முருகேசு கதிரவேற்
பிள்ளை கைம்பெண் சிவகடாச்சம்மா
தத்துவகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டு 950-ம் இலக்கத் தத்துவவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகளில் முறையே: 1-ம் காணியை 1950-ம் ஆண்டு மாசிமாதம் 18-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கமும், 2-ம் 3-ம் காணிகளை பிற்பகல் 1 மணி தொடக்கமும், 4-ம் காணியை பிற்பகல் 4 மணி தொடக்கமும், அந்தந்தக் காணிகளில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்:

1. சரவணைஇறை அளகைகென் வயலும், நரிகன்வயலும். நெற்பரப்பு $53\frac{7}{8}$. எல்லை, கிழக்கு: வயித்திலிங்கம் மகள் பாக்கியலட்சுமி. வடக்கு: வாய்க்கால். மேற்கு: கேணி. தெற்கு: தம்பு அமிர்தலிங்கமும் மறுபேரும். இந்த எல்லைக்குட்பட்ட காணியடங்கலிற் சொரியலாய்காலில்ஒன்றும் இதற்குச்சேர்ந்த எவகளும்.

2. வேலணைகிழக்கிறை அக்கவாளி நெற்பரப்பு 38-ம் வீடும். எல்லை, கிழக்கு: அம்பலவாணசுவாமி கோயிலாதனம். வடக்கு: முருகேசு சபாபதியும், இளையதம்பிபெண் ஆச்சிமுத்துவும். மேற்கும் தெற்கும்: ஒழுங்கை. இந்த எல்லைக்குட்பட்ட காணியடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

3. வேலணைகிழக்கிறை நெருஞ்சிமனைவெளியும், நெருஞ்சிமுனை ஓடையும். நெற்பரப்பு 88. எல்லை, கிழக்கு: P. சிதம்பரநாதன். வடக்கு: வாய்க்கால் மேற்கு: ஒழுங்கை. தெற்கு: விநாயகமூர்த்தி கைம்பெண் ஆச்சிமுச்துவினுதனம். இந்த எல்லைக்குட்பட்ட காணியடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

4. மண்டைதீவுஇறை நொச்சித்தாள்வு அல்லது நொச்சிக்காடு. நிலப்பரப்பு 16-ம் வீடும் கிணறும். எல்லை; கிழக்கு: மயிலன் நாகப்பனும், வயித்தியான் குருநாதனும். வடக்கு: றேட்டு. மேற்கு: சின்னத்தம்பி சுப்பிரமணியர். தெற்கு: இளையதம்பி வீரகத்தியும் மறுபேரும். இந்த எல்லைக்குட்பட்ட காணியடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு மூன்றரை.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
தொழிலாளர்

காரைநகர்,
10-1-50.

## கம்யூனிஸ்த சீனுவும் கத்தோலிக்க சமயமும்

கம்யூனிஸ்தசீனுவில் இன்றுபல நூற்றுக்கணக்கானகத்தோலிக்ககுருமாரும் கன்னியாஸ்திரிமாரும் விவசாயிகளாகவும், தாதிமார்களாகவும்,தெருப்பெருக்கும் தொழிலாளர்களாகவும் தங்கள் சீவனோபாயத்தைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். சீனுவிலிருந்தும் மஞ்சூரியாவிலிருந்தும் வத்திக்கானுக்கு எட்டும்செய்திகளில் மேலும் அடங்கியிருக்கும் தகவல்களாவது: "சில கத்தோலிக்ககுருமார் தங்கள் ஸ்தானங்களில் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அவர்கள் உயிரோடிருக்கவேண்டுமானால் சரீர உழைப்பு வேலைகளைச்செய்யவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். சிலர்கமமுயற்சிக்கோ அல்லது ஆடுமாடுகளின் வளர்ப்புப் பண்ணைகளுக்கோ செல்கின்றார்கள். வேறுசிலர் வீதித்தொழிலாளர்களாகவும், மின்சாரத்தொழிலாளர்களாகவும், மாத்தச்சர்களாகவும் வேலைசெய்கின்றனர். எவரையும் சமையற்காரராகவோ, உபதேசிமாராகவோ, அல்லது பணியாளராகவோ வேலைக்கமர்த்திக்கொள்ளக் குருமாருக்கு அனுமதியில்லை.

கோவிற்சொத்துக்கள் நடத்தப்படும் விதம் இடத்துக்குஇடம் வித்தியாசப்படுகிறது. பெரியநகரங்களிலுள்ள கத்தோலிக்ககட்டிடங்களிற்சில ஒன்றுஞ்செய்யாமல் அப்படியே விடப்பட்டிருக்கின்றன. ஆனால் சிறியநகரங்களிலும், கிராமங்களிலுமுள்ள கோவில்களும், கத்தோலிக்கபாடசாலைகளும் கம்யூனிஸ்த தலைமைக்காரியாலயங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் கோவில்கள் பண்டகசாலைகளாக உபயோகிக்கப்படுகின்றன. கிறீஸ்துசமய போதகநிலையங்கள்மீது அளவுக்குமீறிய வரிகள் விதிக்கப்படுகின்றன. இதனால் அவற்றில் அநேகம் தங்கள்பணிகளைத் தொடர்ந்துசெய்ய முடியாதநிலையிலிருக்கின்றன. கம்யூனிஸ்தசீனுவின் "இரும்புத்திரையைக்" கிழித்துக்கொண்டு றோமாபுரியிலுள்ள வத்திக்கான் விசுவாசப்பரப்புதற்சபைத் தலைமைக்காரியாலயத்துக்கு எட்டும் செய்திகள் கூறுவதாவது: "சமயத்தைக் கௌரவிப்பதே அரசாங்கத்தின் நோக்கமென்று கம்யூனிஸ்தர்கள் பிரகடனம்செய்திருந்தபோதிலும் வெளிநாட்டுச்சமயபோதகர்களுடைய வேலையில் கஷ்டங்கள் நாடோறும் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றன.

வத்திக்கான் விசுவாசப்பரப்புதற்சபைஸ்தாபனம் சமீபத்தில்வெளியிட்ட ஒரு அறிக்கை கூறுவதாவது: "சீனுவில் உண்மையாகவே நடைபெறும் சம்பவங்களைப்பற்றிக் கிடைக்கும் தகவல்களைக் கவனிக்கும்போது சமயசுதந்தரத்தைப்பற்றி விடுக்கப்பட்ட இந்தப் பிரகடனங்கள் எல்லாம் வெளிநாட்டுப் பிரசாரத்துக்காகவே விடுக்கப்பட்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. கிறீஸ்தசமய போதகநிலையங்கள் சம்பந்தமாகச் சீனுவிலுள்ளகம்யூனிஸ்தர்கள் நடந்துகொள்ளும்விதத்தில் முரண்பாடுகள் நிறையக் காணப்படுகின்றன. ஒருபக்கத்தில் சமயத்துக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இன்னொரு பக்கத்தில் சமயத்தின்மீது அடக்குமுறைப்பாணங்கள் எய்யப்படுகின்றன. கீழ்அதிகாரிகள்தான் சொந்தக்குரோதத்தின்பேரில் கிறீஸ்துசமயபோதகர்களைத் துன்புறுத்துகிறார்களேஒழிய மேலதிகாரிகளெல்லாம் இவர்களுக்குத் தக்கபாதுகாப்பு அளித்துக்கொண்டு இருக்கிறார்களென்று கருதுவது தவறு. ஏனென்றால், "வெளிநாட்டினர் சீனுவுக்குள்புகுத்திய குருட்டுநம்பிக்கைகளை"ப் படிப்படியாக வேரறுப்பதே தங்கள்நோக்கமென்று கம்யூனிஸ்தர்கள் பன்முறை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றார்கள். மேலதிகாரிகள் கிறீஸ்துசமயபோதகர்களைப் பாதுகாப்பதுபோல் பாசாங்குசெய்வதும், கீழதிகாரிகள் அவர்களைத்துன்புறுத்துவதுமாகிய இந்தமுரண்பாடு கம்யூனிஸ்தர்களின் தந்திரோபாயங்களில் ஒரு பாகமாகும். சமயத்தைப் படிப்படியாகக் கூர்லவளையைப்பிடித்து நசுக்குவதுதான் இந்தக்கொள்கையின் அந்தரங்கநோக்கம். லோகாதயக்கொள்கைகளையும், நாஸ்திக கோட்பாடுகளையும் வற்புறுத்தும் ஒருகம்யூனிஸம் சீனுவை அடிமைப்படுத்தியிருப்பதால் தூரகிழக்குநாடுகளும் இந்தக்கம்யூனிஸ்த பூதத்துக்குப் பலியாகிவிடக்கூடுமென்று வத்திக்கான் அதிகாரிகள் அஞ்சுகின்றனர். பர்மாவில்நடைபெறும் கலவரங்களுக்கும், உள்நாட்டுப் போருக்கும், இந்தோனீஷியாவில்ஏற்பட்டபுரட்சிக்கும், கோறியாநாடு தொடர்ந்து பிளவுபட்டிருப்பதற்கும், இந்து-சீனுவில் உள்நாட்டுச்சண்டைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதற்கும் கம்யூனிஸ்தர்கள்தான் பொறுப்பாளிகளென்று வத்திக்கான் அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஆசியாவில் கம்யூனிஸத்தைத்தடுத்து நிறுத்துவதில் இந்தியாவும், யப்பானும் பேருதவிசெய்யுமென்று வத்திக்கான் எதிர்பார்க்கிறது. வத்திக்கானுக்கும் இவ்விருநாடுகளுக்குமிடையே இப்பொழுதுமிகவும் சௌசன்யமான உறவு நிலவுகிறது. இவ்வளவு சௌசன்யமானஉறவு சரித்திரத்தில் இதற்குமுன் இருந்ததேகிடையாது. யுத்தத்துக்குப்பின் யப்பானில் ஒருபுதிய கத்தோலிக்கசமய மறுமலர்ச்சி தோன்றியிருக்கிறது. அர்ச். பிரான்சீஸ் சவேரியார் யப்பானில்இறங்கிய நான்காவது நூற்றாண்டுவிழா சமீபத்தில் கொண்டாடப்பட்டபோது அவருடையஞாபகசின்னங்களுக்கு யப்பானியநகரங்களில் கிடைத்தஉற்சாகமான வரவேற்பு இதற்குஒருசிறந்த அத்தாட்சியாகும். அர்ச்.பிரான்சீஸ்சவேரியார் கீழ்த்திசையின் அப்போஸ்தலரென்று யப்பானியர்கள் வரவேற்றார்கள்.

இவ்வருடத்திலே வத்திக்கான்முதன்முறையாக இந்தியாவுடன் இராசீயஉறவு ஸ்தாபித்திருக்கிறது. ஒரு இந்தியப்பிரதிநிதி ஏற்கனவே வத்திக்கானில் பதவியேற்றுவிட்டார். பரிசுத்தவருடவிழாவில் கலந்துகொள்வதற்காக றோமாபுரிக்குவந்துசேர்ந்த இந்தியயாத்திரீகர்கள் இந்தஉறவை மேலும் பலப்படுத்தியிருக்கின்றார்கள். இந்தியாவிலுள்ள கிறீஸ்தவர்கள் சிறுபான்மையோராக இருந்தபோதிலும், தூரகிழக்குநாடுகளில் கலவரநிலைமை பரவாது தடுப்பதில் அவர்கள்உதவிசெய்யக் கூடுமாதலால், இந்தியாவுடன் இச்சிறந்த உறவுநீடிக்க வத்திக்கான் ஆவலாயிருக்கிறது.

❁ ஆஸ்திரேலியாவிலே சென்றவருடம் நிகழ்ந்த ஆகாயவிமான விபத்துக்களில் நூற்றுக்கு 32 விகிதமும் அவைகள் தரையில் இறங்கும்போது ஏற்பட்டனவாம். ஆகாயவிமானங்கள் பறந்துகொண்டிருந்தபோது, பறவைகள் அவற்றில் போய் மோதியதால் இருவிபத்துக்கள் ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருக்கிறது.

## மரணசங்கதி

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையிலே கொன்றாக்டராயிருந்து காலஞ்சென்ற திரு. நீ. சீமாம்பிள்ளை அவர்களின் மனைவியாரான எலிசபேத்து என்பவ விருத்தாப்பியநோய்கண்டு தனது85-ம் வயதிலே சென்ற 28-ந் திகதி சனிக்கிழமை காலஞ்செல்லலாயின. இவ தேவபக்தியில் சிறந்தவ. தவறுதுபூசைகண்டுதினமும் செபமாலை ஓதும் வழக்கமுடையவ. ஏழைகளில் மிகுந்த அனுதாபமுடையவ. இவவுக்கு இரு புத்திரரும், ஒரு புத்திரியும் உள்ளனர். அரசாங்க றெயில்வேயில் ஸ்றேஷன் மாஸ்றராய் இருந்துவரும் திரு. எஸ். ஆசீர்வாதம் அவர்களும், கொழும்பு மியூனிசிப்பாலிற்றியிலே இன்ஸ்பெக்றராய் இருந்துவரும் திரு. எஸ். என். சில்வேஸ்தர் அவர்களும் இவவின் புதல்வர்கள். அன்றுசாயந்தரம் இவவின் பிரேதமானது அழகியதோர் பேழையில்வைத்து இரு வெண்பரிகள்பூட்டிய இரதத்திலே, குருத்துவமாணவர்களும், மூன்று குருப்பிரசாதிகளும் திக்கசங்கீதம்பாடிச்செல்ல, நன்மரணயத்தசபையார் செபங்கள் ஓதிமுன் செல்ல, இனசனர் சிநேகிதர் அயலவர் அனுதாபத்துடன் பின்செல்ல, ஆசனக்கோவில் கொண்டுசென்று அங்கு நடைபெற்ற அந்திம திருச்சடங்குகளின்பின் சேமக்காலையில் அடக்கஞ்செய்யப்படலாயிற்று. இவவைஇழந்து துன்புறும் புத்திரர், புத்திரி, மற்றும் இனசனருடன் யானும் அனுதாபப்படுகின்றேன்.

R. I. P.

## திருமண வைபவம்

யாழ்ப்பாணம், பாஷையூர் வாசரான திரு. அன்ரன் மிக்கேல் அவர்களின் புதல்வரும், சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்களில் ஒருவருமான திருவளர் செல்வன் எம். அந்தோனிப்பிள்ளை, பி. ஏ. அவர்களுக்கும், பாஷையூர் அந்தோனியார்கோவில் மூப்பராயிருந்த திரு. ஜே. ஞானப்பிரகாசம்அவர்களின் புதல்வியும், யாழ்ப்பாண நகரசங்க அங்கத்தவர் திரு. ஜி. ஜே. செபஸ்தியாம்பிள்ளை சேயோன்அவர்களின் மருகியுமான திருவளர்செல்வி பொன்றோஸாவுக்கும் மாசிமாதம் 1-ந் திகதியாகிய நேற்றுப் புதன்கிழமைகாலை பாஷையூர் அர்ச். அந்தோனியார் கோவிலிலே குருமார், ஆசிரியர், இனசனர், சிநேகிதர்ஆதியோர் பெருந்திரளாகக்குழுமியிருந்த சமூகத்திலே கல்லூரித்தலைவரான அதிவண. ரி. எம். எவ். லோங் சுவாமியவர்களால் மெய்விவாகத்திருச்சடங்கு சிறப்பாக நடந்தேறியது. திவ்வியபூசையின்பின் புதிய தம்பதிகள் திரு. எஸ். அருளானந்தம் தம்பதிகளாலும், ஆசிரியர் எஸ். சூசைப்பிள்ளை அவர்களாலும் புஷ்பாரங்கள் சூட்டிச் செண்டளிக்கப்பெற்று, வாத்திய வரிசைகளுடன் வீதியுலாப்போந்து, முந்தமணமகன் மனைறல் மனையிலும், பிந்த மணமகள் மனைறல் மனையிலும் ஆடம்பரமாக வரவேற்கப்பெற்றார்கள். அழகேமயமாய்த் துலங்கிய இருமனைகளிலும் பரிமளிப்பான உபசாரணைகள் நடைபெறலாயின. சாயந்தரம் மணமகள் இல்லத்தில் பெருமிதமாக நடைபெற்ற உபசாரணைக்குப் பல குருமாரும், யாழ்ப்பாண மேயர், நகரசங்க அங்கத்தவர்கள், கல்லூரி ஆசிரியர்கள், மற்றும் பிரபலஸ்தர்கள் சமுகமாயிருந்து தம்பதிகளுக்குச் சோபனங்கூறியும், வெகுமானங்கள் வழங்கியும் சென்றார்கள். இப்புதிபகுடும்பமானது, பதினாறும்பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம்வல்லஇறைவன் திருவருள் புரிவாராக!

—நிருபர்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 2 1950.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org